Regd. No. M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 21 } ஈரோடு 4-9-1948 சனிக்கிழமை { மலர் 52.

## சிரிக்கும் வையம் !

சொந்தமொழி பயின்றிடற்குத் திட்டம் செய்யாச்
சோதாக்கள், தருதலைகள் ஒன்று சேர்ந்து [று
"இந்தியினைப் பொதுமொழியாய்க் கொள்க!'வென்
இந்நாட்டில் வற்புறுத்தல் மடமை யன்றோ?
இந்தியிலே இலக்கணமோ, கலைப் பெருக்கோ
எள்ளளவும் கிடையாதே! ஆள வந்தார்
செந்தமிழ்க்கு வல்லூறாய் வாய்த்தா ரென்ற
செய்தியினை அறிந்தாலே சிரிக்கும் வையம்!

தமிழ்மணக்கும் பூங்காவில் கழிநீர் தேக்கிச்
சாக்கடையின் முடைநாற்றம் வீசச் செய்து
"கமழ்கிறதே! இம்மணமே முல்லை நாற்றம்!
கனிதமிழ நாட்டவரும் ஒப்ப வேண்டும்!
அமைதியுடன் இதைஏற்றுக் கொள்க!'' என்றால்
அறிவுடையோர் எவ்வாறு ஒப்பு வார்கள்?
தமிழகத்தை ஆளவந்தார் கூற்றீ தென்றால்
தயங்காமல் கைகொட்டிச் சிரிக்கும் வையம்!

"வேண்டாமிவ் விபரீதம்!'' என்று சொன்னால்
"வீழ்த்திடுவோம் கிளர்ச்சியினை! உமை யொடுக்க
வேண்டியன செயத்தெரியும்! என்று கூறி,
வீராப்புப் பேசுகிறார் விவேக மின்றி!
"மாண்டொழியும் வெஞ்செயல்க''ளென்பதற்கு
வாலாறு பலசான்று பகரும்! மக்கள்
வேண்டாத செயல்செய்ய, ஆள வந்தார்
விழைகின்றார் என்றறிந்தால் சிரிக்கும் வையம்!

"சாமி பழனியப்பன்"

## 1948 SEPTEMBER. 1948

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

சிறுவர் பகுதி.

# குதிரை கொடுத்தான்

"தாதா"

பட்டிவீரன்பட்டியிலே கைலாசத் தபால்பெட்டி என்ற ஒரு பார்ப்பனன் இருந்தான். அவனுக்குச் செத்தவர்கள் வீட்டில் இருப்பவர்கள் பொருளைச் சுரண்டுவதுதான் தொழில்.

ஒருநாள் அவ்வூர் கோட்டிப்பாட்டி வீட்டில் கொட்டுச் சத்தம் கேட்டு ஒட்டமாக ஓடிப்போய்ப் பார்த்தான். திடீரென்று கொட்டுச் சத்தம் அடங்கி அழுகுரல் கேட்டது. அவ்வீட்டிலிருந்து இரண்டு பார்ப்பனர்கள் வெளியே துரத்தியடிக்கப்பட்டனர். கைலாசத் தபால்பெட்டி அப்பார்ப்பனர்களிடம் சென்று சங்கதி என்ன என்று விசாரித்தான்.

அதற்கு அப்பார்ப்பனர்கள், 'கோட்டிப்பாட்டியின் பேத்திக்குத் திருமணம் செய்து வைக்கச் சென்றோம், தாலிகட்டிய கூலி வாங்கிக்கொண்டு புறப்படும் சமயத்தில் திடீரென்று மணப்பெண்ணுக்கு மாரடைப்புண்டாகிச் செத்துப் போகவே, உடனே நாங்கள் எங்கள் கையில் அகப்பட்டவைகளை மட்டும் மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டோம். அதைப் பார்த்துக்கொண்டேயிருந்த கோட்டிப்பாட்டியின் பேரனாகிய வீரன் ஓடிவந்து, 'தீர்க்க சுமங்கலி பவான்னு சொன்னீங்களேடா தடிப்பயலுங்களா! எங்கேடா என் தங்கை?' என்று திட்டி எங்கள் கைகளிலிருந்த மூட்டைகளைப் பறித்துக்கொண்டு அடிச்சு விரட்டிவிட்டான்.' என்றழுதனர்.

கைலாசத் தபால்பெட்டி அப்பார்ப்பனர்களுக்கு ஆறுதல் கூறிக் கண்ணீரைத் துடைத்து அனுப்பிவிட்டு, மறுநாள் கோட்டிப்பாட்டி வீட்டுத் திண்ணையில் போய் 'கைலாசா வாசா!' என்று பலமான கூச்சல்போட்டுக்கொண்டே உட்கார்ந்தான்.

உள்ளே இருந்த கோட்டிப்பாட்டி வெளியில் வந்து 'நீர் யாரையா?' என்று கேட்டாள். 'நான் கைலாசவாசி பூலோகத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டுப் போகலாமென வந்தேன்' என்று புளுகினான் கைலாசத் தபால் பெட்டி.

கோட்டிப்பாட்டி அதை நம்பிவிட்டாள். 'அப்படியானால், அங்கு என் பேத்தியைப் பார்த்தீரா?' என்று பரிவுடன் கேட்டாள். 'ஆம்! பார்த்தேன் அது நேற்றுத்தான் கைலாசத்திற்கு வந்துச்சு. வந்ததிலிருந்து ஒரே அழுகையா அழுதுகொண்டே இருக்கு' என்று மேலும் புளுகினான்.

'அய்யய்யோ! என் பேத்தி வாழ்கிற பருவத்தில் கைலாசத்திற்குப் போய்விட்டாள். இங்கே அவளுடைய தங்க நகைகளும், பட்டுச் சீலைகளும், வெள்ளிப் பாத்திரங்களும் இருக்கின்றன. அவைகளை உம்மிடம் தருகிறேன் நீர் கொண்டுபோய்க் கொடுத்துவிடுகிறீரா?' என்று கேட்டாள்.

'சரி அப்படியே செய்கிறேன், சீக்கிரம் அவைகளை ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டுவந்து கொடு பாட்டி, நேரம் ஆகிவிட்டது, நான் கைலாசத்திற்குத் திரும்பிப் போகவேண்டும்' என்று துடியாய்த் துடித்தான் கைலாசத் தபால்பெட்டி.

உடனே கோட்டிப்பாட்டி உள்ளே சென்று தன் பேத்தியின் பொருள்களை எல்லாம் எடுத்து ஒரு பெரிய மூட்டையாகக் கட்டிக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, 'அய்யா! நீர் இன்னும் கொஞ்ச நேரம் தாமதித்தால், என் பேரன் வீரனும் வந்துவிடுவான், அவனும் தன் தங்கைக்கு இன்னும் ஏதாகிலும் கொடுத்தனுப்புவான்' என்று கெஞ்சினாள்.

கைலாசத்தபால் பெட்டியோ, வீரன் வருவான் என்ற பேச்சைக் கேட்டதுமே, 'ஒரு வினாடிகூடத் தாமதிக்க முடியாது. இந்தா பாட்டி உன்மூட்டை நான் போகிறேன்' என்று பயந்து ஓட ஆரம்பித்தான். ஆனால், கோட்டிப்பாட்டிக்கு விவரந்தெரியாததால் 'சரி சரி. நீர் கோவித்துக்கொள்ளாதீர்! இப்போதைக்கு இந்த மூட்டையை மட்டும் கொண்டுபோய் என் பேத்தியிடம் கொடுத்துவிடும். இனிமேல், நீர் பூலோகத்திற்கு வரும்போது, மறந்துவிடாமல் மறுபடியும் இங்கு வந்துவிட்டுப்போக வேண்டும். அப்போது என்பேரனும் நானும் இன்னும் ஏராளமான பொருள்கள் என் பேத்திக்காகச் சேகரித்து வைத்திருந்து தருவோம்' என்றுகூறி அம்மூட்டையைக் கொடுத்து அனுப்பிவிட்டாள்.

சற்று நேரத்திற்குப் பிறகு வீரன் வந்தான். கோட்டிப்பாட்டியின் முட்டாள் தனத்தினால் தங்கநகைகளும், பட்டுச்சீலைகளும், வெள்ளிப் பாத்திரங்களும் கொள்ளை போய் விட்டதை அறிந்து மனங்குமுறினான். பாட்டியையும் நன்றாகத் திட்டினான். பிறகு, கைலாசத்தபால் பெட்டியைத் தேடிக் குதிரைமீது விரைந்து சென்றான்.

கைலாசத்தபால் பெட்டியைச் சற்று தூரத்தில் கண்டதும் துரத்திச் சென்றான். ஆனால், கைலாசத்தபால் பெட்டி தன்னைப் பிடிக்க வரும் வீரனைக்கண்டதும் ஒரு மரத்தில் மூட்டையோடு ஏறிக்கொண்டான். வீரனும் குதிரையை விட்டு இறங்கி அம்மரத்தின் மீது ஏறினான்.

கைலாசத்தபால் பெட்டி தந்திரமாக மரக்கிளைகளின் வழியாகக் குதிரைக்கு நேரேவந்து அக்குதிரைமீது குதித்து உட்கார்ந்துகொண்டு மூட்டையோடு குதிரையையும் வேகமாக ஓட்டிச்செல்

## எப்படித் திரும்பிவருவாரோ?

நான் ஒரு முஸ்லிம்; தமிழ் நாட்டில் பிறந்தவன். தமிழ்நாட்டில் வளர்ந்தவன். தமிழ் படித்தவன். தமிழ் முஸ்லிம். என் தாய் எனக்குச் சொல்லிக் கொடுத்தது தமிழ். நான் எண்ணுவது தமிழ். எழுதுவது தமிழ். இந்நிலையில் எனக்கும் என்போன்ற முஸ்லிம்களுக்கும், ஏன் இந்தி? இன்று காம்ராஜர் ஒரு முஸ்லிம் கூட்டத்தில் போய் தமிழுக்கு விரோதமாய்ப் பேசுவாரானால் அவர் எப்படித் திரும்பி வருவார் என்பதை அவர் காணவேண்டும்!

—திருவாரூர் ஷெரீப்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# எங்கள் சிறை வாழ்வு!

## சிறை புகுந்தோன்.

★

ஆகஸ்ட் 22-ம் நாள் சென்னை மீரான் சாயுபு தெரு முதல் நெம்பர் பெரியார் அவர்களுடைய இல்லத்தில் கூடிய திராவிடத் தோழர்களில், அன்று வந்த சிறை அழைப்பைக் குறித்து யாரும் எதிர்பார்க்கவே இல்லை. "ஆகா! அந்தச்செய்தி மாத்திரம் ஒரு அரைமணி நேரத்திற்கு முன்னால் தோழர்களுக்குத் தெரிந்திருக்குமானால், எங்களுடைய எண்ணிக்கை 95-என்ற அளவோடு இருக்காது, குறைந்தது ஒரு சைபர் ஆவது இறுதியில் சேர்க்கவேண்டிய அளவுக்கு அந்த அரைமணி நேரமே போதுமே" என்று தோழர்கள் உற்சாகத்தோடு பேசிக்கொண்டார்களே அது 100-க்கு 100-உண்மை ஆகியிருக்கும் என்பதை, இப்போது வேண்டுமானாலும் ஓமந்தூரார் தலையிலடித்துச் சொல்ல நான் தயார்.

10-மணிக்குத் தொடங்கி முக்கால் மணி நேரம் வரை நடந்த அந்தக் கமிட்டிக்கூட்டத்தில், கமிட்டி மெம்பர்கள் 24-பேரும், ஹாலின் ஒருபுறத்தில் தலைவர் பெரியாரவர்களைச் சூழ்ந்திருந்தனர். பல மாவட்டங்களிலிருந்தும் பொது அழைப்புக்கிணங்க வந்திருந்த இயக்கப் பிரமுகர்களும், இயக்கத் தொண்டர்களும் ஹாலில் மற்றொரு பகுதியில் சூழ்ந்து இருந்தனர். அன்று முடிவுசெய்யவேண்டிய பிரச்னைகளைக் குறித்துப் பூர்வ பீடிகையாகத் தலைவர் பெரியாரவர்கள் தம்முடைய கருத்துக்களை முதலில் விளக்கியும், இடைஇடையே மெம்பர்கள் எழுப்பிய அய்ய வினாக்களுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டும் வந்தார்கள். அப்பொழுதுதான் போலீஸ் சூப்பரிண்டெண்ட் அங்கு வந்திருக்க வேண்டும். ஹாலின் வாசற்படியில் வந்து முழுக் கூட்டத்தினரும் தன்னைப் பார்க்கும் படியான நிலைமையில் நின்ற அவர், "குட்மார்னிங்" என்று இரைந்து கூறினார். அவர் இரைந்து கூறியதைக்கூடக்கவனியாதவர்களாய் மெம்பர்கள் அனைவரும், மற்றவர்களில் பெரும்பாலோரும் விவாதத்தில் ஈடுபட்டு நின்றார்கள். சூப்பரின்டெண்டுக்கு அருகில் இருந்த யாரோ ஒரு தோழர் தலைவர் பெரியாரை நோக்கி "அய்யா! யாரோ போலீசார்" என்று கூறினார்.

இதைக் கேட்ட பெரியாரவர்கள் நிமிர்ந்து நோக்கினார். அப்பொழுதான் நானும் அந்தத் திசையை நோக்கினேன். "You Are All Arrested" (நீங்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள்) என்று கூறி வலக்கையைத் தலைமேல் உயர்த்தி ஆட்டிக்கொண்டு, கெக்கலிப்புடன் அவர் சிரித்த சிரிப்பு இருக்கிறதே, அதை அவர் வீரத்தின் விளைவான வெற்றிச் சிரிப்பென்று தான் நம்பியிருக்க வேண்டும் எனக் கருதுகிறேன். அரஸ்ட் என்பதைக் கேட்டவுனே அய்யா அவர்கள் துள்ளி எழுந்ததும், "நான் மட்டும் தானே" என்று கேட்டு "இப்பொழுதே புறப்படட்டுமா" என்று கூறிக்கொண்டே சூப்பரின்டெண்டை நோக்கி சிங்கஏறுபோல் நடந்து வந்த கெம்பீரத்தையும், பார்க்கக் கொடுத்து வைத்த அந்த அதிகாரி, சற்று மிரண்டு தான் போயிருக்கவேண்டும். அருகில் இருந்த மற்ற தோழர்கள், "எல்லோருமே அரெஸ்ட்டாம்" என்றுகூற, அதே நேரத்தில் சூப்பரின்டெண்டும் "No, No you are all arrested" என்று அதை ஆமோதிப்பதைப்போல மீண்டும் கூறினார்.

நாலாபுறத்திலும் தன் பார்வையைச் செலுத்திவந்த பெரியார் அவர்கள் தோழர்களை நோக்கி, "அமைதியாய் அப்படி அப்படியே இருங்கள்! எப்படி நடந்து கொள்ள வேண்டுமென அய்யர் அவர்கள் சொல்லுகிறார்களோ அப்படியே நடந்து கொள்ளுங்கள்! என்று கூறவே எல்லோரும் அப்படியே அமைதியாக இருந்தனர்.

கூட்டத்திற்கு வந்திருந்த ரிப்போர்ட்டர்கள் வெளியேறலாமா? என்று பிறகு சூப்பரின்டெண்டைக் கேட்டார் தலைவர் பெரியார். இங்கிருக்கும் எவருமே வெளியேறக் கூடாது என்று அதற்குப் பதில் வந்தது.

பல தோழர்கள் சூப்பரின்டெண்டிடம், "அப்பாடா இப்போதாவது எங்களுக்கு இந்த நிலை கிடைத்ததே, ரொம்ப சந்தோஷம்" என்று கூறியதும், அவர் முகமலர்ச்சியுடையவர் போல் சிரித்துக்கொண்டே தலையசைத்ததும், கூட்டத்தினரின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட அவர், வீண் கெடுபிடிகள் எல்லாம் அனாவசியம் என்று உணர்ந்து கைவிட்டதும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

"சிலர் சிலராக வெளியேறலாம்" என்று சூப்பரின்டெண்ட் கூறியவுடனே வரிசையாக மாடியை விட்டுத் தோழர்கள் இறங்கினார்கள். போலிசார், வீட்டையடுத்த தெருவில் நின்ற போலீஸ் வான்களுக்கு (கார்களுக்கு) வழியமைத்து வைத்திருக்கவே, ஒவ்வொருவானிலும் எந்த அளவுக்கு இடம் இருந்ததோ அந்த அளவு உட்கார்ந்தும், நின்றும் உற்சாகத்தோடு தோழர்கள் விளங்கினார்கள்.

வழி நெடுக இரு மருங்கிலும் நின்ற

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

---

வதைக் கண்டான் வீரன், கடுங்கோவமும், அவமானமும் கொண்டு மரத்திலிருந்து கீழே குதித்துத் துரத்தி ஓடினான்.

ஓடிஓடி வீரனுக்கு கால்களும் கடுத்து விட்டது. இனி கைலாசத்தபால் பெட்டியைப் பிடிக்கவே முடியாது என்று நினைத்ததும், உடனே கைலாசத்தபால் பெட்டியை நோக்கி 'ஏ கைலாசவாசியே' நான் உன்னைப் பிடிக்கவரவில்லை. அந்தக் குதிரையை உன்னிடம் கொடுத்து விட்டுப் போகத்தான் வந்தேன். என்தங்கை உன்னிடம் அண்ணன் என்ன 'கொடுத்தான்" என்று கேட்டால், "குதிரை கொடுத்தான்" என்று சொல்லு, மறந்து விடாதே' என்று கத்தினான் வீரன்.

சிறுவர்களே! இன்றைய நம் அரசியலாரின் செயல்கள் பெரும்பாலும் இக்கதையில் வரும் வீரனின் விபரீதக் கூக்குரலைப்போலவே இருக்கின்றன என்பதை உணருங்கள்.

உதாரணமாகத் தமிழைவளர்க்க எண்ணி ஆங்கிலத்தைப் புறக்கணிக்க முயன்ற கல்வி அமைச்சரின் முயற்சி, கடைசியில், குதிரை கொடுத்த வீரனைப்போல் இந்தி நுழைவில் கொண்டுவந்து விட்டு விடவில்லையா?

---

# அசோகசக்கிரத்தின் கீழா அக்கிரமம் செய்வது?

★

இன்று இந்திய யூனியன் கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் சக்கிர நெறியைக்கொண்ட அசோகன் காலத்தில் தமிழுக்குக் கேடு சூழ்ந்தது கிடையாது. அக்பர் காலத்தில் கிடையாது. அதன் பின்பு வர வரக்கேடு சூழ ஆரம்பித்தது. இன்று அசோகனது சக்கர நெறிநிற்கும் அரசாங்கம்தமிழுக்கு இன்னும் கேடுதேட முற்படுகிறது. அதற்கு நாம் விடக்கூடாது.

—திருவாரூர் ஷேரீப்.

# ★ இந்தி நாடகம். ★

★

'இந்தி' நாடகம்! அற்புதமான காட்சிகள்! கலர் ஜோடனைகள்! டர்னிங் சீன்கள்! கதைக்கேற்ற வசனம்! பார்க்கவும், கேட்கவும் தெவிட்டாத அமைப்பு! நாடகத் திற்கேற்ற நடிகமணிகள்! வருக! வருக!

இந்த விளம்பரம் செய்யப்பட வில்லை! ஆனால் நடப்பதென்ன வோ நாடகம்தான்! நடத்துபவர் கள் 'தமிழ்நாடு தேசிய நாடக சபா' அதிகாரிகள்! உரிமை ஓமாந் தூர் ஒ. பி. இராமசாமி ரெட்டி யார்! கூட்டுக் கம்பெனியாதலால் அதன் டைரக்டர்கள், 'இந்து' ஆசிரியர், 'சுதேசமித்திரன்' ஆசிரி யர், 'தினமணி' ஆசிரியர், 'தின சரி' ஆசிரியர், 'பாரததேவி' ஆசிரி யர் ஆகியோர்கள். நிறைய மூல தனம் இருக்கிறது! இதில் முக்கியப் பங்குதாரர் 'தினசரி' ஆசிரியர் 'சொக்கலிங்கம்' அவர் கள்! காரணம் மற்ற டைரக்டர் கள் உண்மையை ஒளித்த போதி லும் 'தினசரியார்' மட்டும் தன் பத்திரிகையில் 'நாடகம்' என்று தான் விளம்பரப்படுத்தி இருக்கி றார். உண்மை சொரூபி அல்ல வா! அதனால்தான் அபபடி!

நடிகர்கள், டி. எஸ். அவ னாசிலிங்கம் செட்டியார், ஓமாந்தூர் இராமசாமி ரெட் டியார், சர்தார் வேதரத் னம், காமராஜ் இன்னும் மற்ற டைரக்டர்கள்! இவர்களுக்கு எதி ரியாக நடிப்பது, ஈ. வெ. ரா., சி. என். அண்ணாதுரை ஆகியோர். 'தமிழ்நாடு தேசிய நாடக சபா' சாமன்யப்பட்டதா என்ன?

* *

கதைப்போக்கு:—தமிழன் ஒரு வன், 'தமிழ்' என்ற அழகிய கன் னியைக் காதலித்து, மணம் புரிந்து பல ஆண்டுகளாக இன்ப வாழ்வு நடத்துகிறான். பற்பல இன்னல் களுக்கிடையே 'தமிழ்'க் கன்னி யைக் கைவிடாமல் கண் இமை போல் பாதுகாத்து வருகிறான். அந்த சமயத்தில் அரசாங்கம் நடத்துவோர் 'இந்தி' என்ற 'சுழற் கண்கள்' கொண்டவளை, காமவேட்டைக்கு அனுப்புகிறார் கள்! அந்தக் 'கைகாரி' பல வித மோகலீலைகள் புரிந்து தமிழ் நாட்டில் வந்து இங்குள்ள மாகாண மந்திரிகளைத் தன் வலை யில் சிக்க வைத்துக் கொண்டாள். அவள் திருப்தியடையாமல், 'தமிழ்'க் கன்னியை உயிராக நினைத்து வாழ்க்கை நடத்தும், தமிழனையும் தன் காமத்திற்கு இரையாக்கப் பார்க்கின்றாள்! அவள் மதி முகத்தில் மயங்கிய மந்திரிமார்கள் அவளைப்பற்றி பிரமாதமாக வர்ணனை செய்து பேசுகிறார்கள்! 'தமிழன்' எதற் கும் அசைந்து கொடுக்கவில்லை. 'இந்தி' தன் சுற்றத்தார்களின் பலத்தைக் காட்டிப் பயமுறுத்துகி றாள்! மந்திரிமார்களும் செய்வது அறியாது திகைத்து தமிழனைக் கட்டாயப்படுத்துகிறார்கள்! அந்த சங்கடமான நிலையில் தமிழனுக் கும், தமிழ்க் கன்னிக்கும் பிறந்த வீரப்புதல்வர்கள் தம் அன்னை க்கு வந்த ஆபத்தைத் துடைக்க, கருவறுக்கக் கிளம்புகின்றனர்! அந்தப் பணியிலே 'தமிழ்'க் குடும் பத்தின் 'தம்பி'களின் முதல்வன் 'அண்ணா' முதல் போர்களத்தில் இறங்குகிறான்! போர் நடக்கிறது! இன்னும் பாக்கிக் குமாரர்களும் 'துடியாய் துடித்துக் கொண்டிருக் கிறார்கள்!'' இதுதான் கதைய மைப்பு! இதை சுற்றி வளைத்துத் தான் சம்பவங்களும் பின்னுகின் றன! இது ஒரு தொடர் நாடகம்!

* *

நடிப்பு!

இந்நாடகத்தில் 'இந்தி'யைக் காதலித்து மயங்கி விழுந்து 'தத்து பித்தென்று' உளறும் நடிப்பு 'அவினாசியார்' அவர்களுக்கு நன் றாகப் பொருந்தி இருக்கிறது!

அப்படியும் இல்லாமல், இப்படி யும் இல்லாமல், மதில் மேல் பூனை போல் 'இந்தி'யைக் கை விட முடியாத நிலையில் தவித்து 'ஓமாந்தூரார்' நடித்திருப்பது மிகப் பொருத்தம்!

தங்கள் 'இந்தி'யின் திறமையை யும், தங்களின் பலத்தையும் காட்டி மந்திரிகளை மிரட்டும் கட் டத்தில் 'வேதரத்னம்' அவர்களின் நடிப்பு உச்ச நிலையை அடை கிறது!

அவரைத் தொடர்ந்து, ''வேத ரத்னம் அவர்களே! எங்களின் பரிபூரண ஆதரவு தங்களுக்கு எப் போதும் உண்டு'' என்று 'தினசரி' 'இந்து' 'சுதேசமித்திரன்' 'தின மணி' 'பாரததேவி' போன்றவர் நடிக்கும் கட்டம் வெகு அபாரம்.

தான் அனுப்பிய 'இந்தி'ப் பெண் வெகு திறமையாக வேலை செய்வது கண்டு, அவ்வப்போது மாகாண மந்திரிகளை எச்சரிக் கும், வடநாட்டு வேந்தர்களாக வும், 'இந்தி'க் கைகாரியின் பெற் றோர்களாகவும் நடிக்கும் 'ஜவகர்' 'படேல்' 'கிருபளானி' போன்ற வர்களும் நன்றாகவே நடித்திருக்கி றார்கள்.

இவ்வளவையும் மிஞ்சி விடுகி றது 'தமிழ்' இளைஞர்களின், 'அண்ணா'வாக முதல் போர்க் களத்தில் இறங்கி நடிக்கும் 'அண் ணாதுரை' அவர்களின் நடிப்பு! அவர் நடிப்பதாகவே தெரியவில் லை! உண்மையிலேயே 'தமிழுக் காக போர் புரிகிறார்' என்றுதான் சொல்லவேண்டும்! அந்தக் கட்டம் அப்படிப்பட்டது!

தமிழனாக பாகம் ஏற்றுக் கொண்ட, தமிழராகவே வாழ்க் கையில் இருக்கும் ஈ. வெ. ரா. அவர்களின் நடிப்பு மிகமிக அற்பு தம்! எப்போதும் போல், சாந்தம், அன்பு, கட்டுப்பாடு, திட்டம் என்று உண்மையாகவே மேடை களில் கூறுவாரே—அங்கேயும் அவைகளையே — உண்மையைக் கூறி விடுகிறார்! 'தமிழ் தந்தை யாக' அவர் இருப்பது மிகப் பொ ருத்தம்!

* *

ஆனால், நாடகத்தில் முக்கியப் பொறுப்பேற்றுக்கொண்ட 'தின

[தொடர்ச்சி 14ம் பக்கம்]

## யார் சொன்னால் என்ன?

★

யார் சொல்கிறார்கள் என்பதில் கவனம் வேண்டாம். என்ன சொல்லுகிறார்கள் என்பதைக்கவ னியுங்கள்.

யார் ஆளுகிறார்கள் என்பதைப் பற்றி நமக்குக் கவலை கிடையாது. எப்படி ஆளுகிறார்கள் என்பதைப் பற்றித்தான் எண்ண வேண்டும்.

நாட்டின் நலனுக்காக யார் சொன்னாலும் சரி, அவர்களுடன் ஒத்துப் போவதில் தவறு கிடை யாது.

—ம. போ. சி.

கதை கற்பனை,

சிறுகதை

முதற்பருவம்.

# என் குற்றமா?

போட்டி

எண் 12.

சுகவாழ்வு! அது தனிப்பட்ட ஒரு சிலரின் ஏக போகமிராசுப்பாத்தியதை அல்லவா? என் போன்ற ஏழைகளுக்கு அதுஎங்கேகிடைக்கும்? என் பெற்றோர்கள் ஒரு ஏழைக்குடும்பத்தை சேர்ந்தவர்களே என்றாலும் வாழ்வின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வசதியில் அவர்களின் வாழ்க்கை சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. ஏழைகள் என்றால் குழந்தைகள்மீது ஆசை இல்லாமலா போய்விடும்?

நான் பிறந்ததும் ஆசையுடன்தான் வளர்த்தார்கள் .பணககாரர்கள் வீட்டுக் குழந்தைகளைப்போல நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளரா விட்டாலும், உள்ளதை உண்டு உயிர் வாழ்ந்து, வயதுக்குத் தக்க வளர்ச்சியடைந்து ஏழாவது வகுப்பு வரை பள்ளியில் படித்து, பதினைந்தாவது வயதை வந்தடைந்தேன். ஏழைகளுக்கு அவசியம் இல்லாத! என் வாழ்வையே நாசப்படுத்திய அழகு என்ற விஷம் என்மீது தன் பரிபூரணக் கைத்திறனைக்காட்டியிருப்பதாகப் பலர் சொல்லக் கேட்டேன். அழகிருந்தால் என்ன? அதற்காக தங்கள் கவுரவத்திற்குப் பங்கம் வரும் வகையில் தங்கள் அந்தஸ்திற்கு தகுதி இல்லாத என்னை, எந்த பணக்கார மாப்பிள்ளை வந்து மணக்கப் போகிறான்? அழகையும் குணத்தையும் கண்டு காதல் கொண்டு மணம் முடித்து வாழ்வது கதையிலும் காவியத்திலும்தானே?

காதல் மட்டும் என்ன? குரூபியாய் இருந்தாலும் குபேரன் வீட்டுப் பெண்ணாயிருந்தால்தானே அந்தஸ்துள்ள ஆண்களுக்கு அது உண்டாகி "காதல் போயின் சாதல்" என்ற நிலையை உண்டாக்குகிறது! என் போன்ற ஏழைகள் பக்கம் அது எரெடுத்தும் பாராதே! என் சுற்றத்தார்களில் நல்ல பணக்கார மாப்பிள்ளைகள் பலர் இருந்தார்கள். என்றாலும் அவர்களில் ஒருவருக்கும் என் மீது காதல் கீதல் ஒன்றும் ஏற்படவில்லை. அவர்கள் அவ்வளவு பைத்தியக்காரர்களா என்ன?

எனவே எனக்கு அத்தகையஆபத்து ஏதும் நேரவே இல்லை. என் தாய் தந்தையார் எனக்கென்று ஒருவனை பிரம்மா சிருஷ்டி செய்துதான் இருப்பார் என்ற எண்ணத்தால் நிம்மதியாய்த்தான் இருந்தார்கள்.

அவர்கள் நினைத்தபடி பிரம்மா சிருஷ்டித்து அனுப்பித்தானோ என்னமோ, எங்கிருந்தோ, யாரோ ஒருவர், நான் கண்டும் கேட்டும் இராத, ஆனால் என் சுற்றத்தார்களில் ஒருவர் என்னை மணக்க முன்வந்தார். படிப்பே இல்லாதவர், பள்ளிக்கூடம் என்பதே தெரியாதவர், அழகும் அறிவும் இல்லாதவர் என்றெல்லாம் கேள்விப்பட்டேன். இருந்தால்என்ன? நான் பணக்காரர் வீட்டுப்பெண்ணா நல்ல படிப்பும் அழகும் உள்ள மாப்பிள்ளையாய் வேண்டும் என்று சொல்ல? இரண்டாம் தாரம் மூன்றாம் தாரம் என்று வாழ்க்கைப்படுவதற்கே பிறந்து வளர்ந்த என்போன்ற ஏழைகளை முதல் தாரமாகவே மணக்க முன்வந்த வாலிபருக்கு என் நன்றியும் சம்மதமும் அளித்தேன். ஜோதிடரின் பொருத்தத்துடனும், சம்பிரதாயத்துடனும், சாஸ்திர சம்பிரதாயப்படி அய்யர் மந்திரம் ஓத, அம்மிமிதித்து, அருந்திகண்டு வேதவிதிப்படி திருமணம் நடந்தேறியது.

## தோழர்களே!

இதற்குமுன் 11 கதைகளையும் படித்தீர்களா?

இதையும் படியுங்கள்!

இன்னும் 1 கதை பிரசுரிக்கப்படும்.

அதையும் படியுங்கள்!

பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

பெற்ற தாயையும், தந்தையையும், உற்றதோழியர்களையும், உடன்பிறந்தவர்களையும், சுற்றத்தார்களையும்,பதினைந்து வருடமாய்ப் பிரந்து வளர்ந்து பார்த்துப் பழகியவர்களையும், என் வீட்டையும் ஊரையும் விட்டு, இதுவரை நான் கண்டிராத புதிய ஊருக்குப், பழகியிராத புதியமனிதர்களுடன் என் வாழ்க்கையைத் துவக்க மனமுவந்து சென்றேன். என் ஏழைப் பெற்றோர்களுக்கும் கொஞ்சம் சுமை குறைந்தது. இப்படித் தொடங்கிய என் வாழ்க்கை ஓடம் ஓரிருமாதங்கள், உல்லாசமாய்ச் செல்லாவிட்டாலும் ஓரளவு நிம்மதியாகச் சென்றது./சென்றவிடத்தில் என்காரியங்கள் யாவும் செம்மையாகச் செய்து வந்தேன். கணவன், மாமன், மாமி, உற்றார், உறவினர் யாவருக்கும் அடக்க ஒடுக்கமாய், செய்யவேண்டிய பணிவிடைகளை ஒழுங்காகச் செய்து வந்தேன். எந்த அழகு பூரணமாய் இருக்கிறதெனப் பெருமை கொண்டிருந்தேனோ அந்த அழகு என் வாழ்வுக்குச் சத்துருவாக முடிந்தது. இரண்டாந் தாரம், மூன்றாந் தாரம் என்று இளம் பெண்களைக் கல்யாணம் செய்துகொண்ட கிழவர்கள், பெண்கள் எவ்வளவு யோக்கியமாய் நடந்து கொண்டாலும், தங்கள் சக்தியில் நம்பிக்கையில்லாத அவர்கள் எங்கே தங்களைப் பிடிக்காமல் தவறி நடந்து விடுவார்களோ என்று சந்தேகம் கொண்டு, இம்சைகள் பல புரிந்து அவர்கள் வாழ்வை வீணாக்கி விடுகிறார்கள் என்று கேள்விப்பட்டிருந்தேனோ, அதுபோல் அழகும் படிப்பும் உள்ள என்னை, இது இரண்டுமே இல்லாத என் கணவர் சந்தேகங்கொண்டு காண ஆரம்பித்து விட்டார். சொல்லொணா இம்சைகளும் அடக்கு முறைகளும் ஆரம்பமாகி விட்டது. நான் இருக்கும் வீட்டின் பாதை வழியாய் யாராவது ஆடவர்கள் நடந்தால், எனக்குத்துப தீபனைவேத்தியங்கள் நடக்க ஆரம்பித்துவிட்டது. வீதியில் யாரோ நடப்பதற்கு நானா பொறுப்பு, அது என் குற்றமா? சகிக்க முடியாத துன்பங்களைச் சகித்துக் கொண்டு, ஏழைகளுக்கு இன்றியமையாத பொறுமையுடன் நாளைக் கடத்திவந்தேன். மாமி, நாத்தி முதலியவர்களின் தூண்டுதலும் இதனுடன் கலந்து என் பொறுமையை மிகவும் சோதித்தது. பொறுமைக்கும் ஒரு அளவு உண்டல்லவா? முடிந்த அளவு சகித்தேன், மேலும் மேலும் சகித்தேன், முடியவில்லை. என் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதன் விளைவு, நான் வாழப்புகுந்த கணவன் இல்லத்தை விட்டு, இல்லை, இல்லை மனித மிருகங்கள் வாழ்ந்த காட்டைவிட்டு என் பெற்றோருக்கு மீண்டும் சுமையானேன். இதுவரை என் பெற்றோர்கள் செய்து வந்த வேலைக்கு எதிர்பாராத வகையில் ஏதோ இடையூறுஏற்பட்டதால், அவர்கள் காலந்தள்ளுவதே மிகக் கஷ்டமாயிருந்த நிலையில் என் வரவு அவர்களுக்குச் சுமக்கமுடியாத சுமையாயிற்று. சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டப்படவேண்டிய நிலையில், நானும்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# ஈரோட்டில்
# இந்தி எதிர்ப்பு நிகழ்ச்சிகள்!
## ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும்
### நன்கொடையாக அளித்த 'கல்' ஏலம் விடப்பட்டது.

★

ஈரோட்டில் பிரதிதினமும் காலை 7-30 மணிக்கு நாதன் கம்பெனி புக்ஸ்டாலிலிருந்து தொண்டர்கள் சைக்கிலில் ஊர்வலமாகப் பல முக்கிய தெருக்களின் வழியாகச் செல்கிறார்கள். ஊர்வலம் நடத்தும் காப்டன்களாகத் தோழர்கள் அப்பாவு, ஆர். பெருமாள் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஊர்வலத்தில் பெரியார் அவர்கள் அறிக்கையில் கண்ட வாக்கியங்களைத் தவிர வேறு எதையும் உச்சரிப்பதே கிடையாது.

* *

22—8—48தேதி சென்னையில் தலைவர்களுடன் கைது செய்யப்பட்ட ஈரோடு நகர திராவிடர் கழகக் கமிட்டி உபதலைவர் தோழர் எம். கே. குகநாதன், "குடிஅரசு" உதவி ஆசிரியர் புலவர் நா. மு. மாணிக்கம் ஆகியவர்கள் விடுதலை செய்யப்பட்டு 29—8—48 தேதி ஞாயிற்றுக்கிழமை ஈரோடு வருகிறார்கள் என்ற சேதியைக் கேட்டு நூற்றுக்கணக்கான தோழர்கள் 29-ந்தேதி அதிகாலை 4 மணிக்கே ஈரோடு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து விட்டார்கள். அன்றைய தினம் மெயில் 2 மணிநேரம் தாமதித்து வந்தது. சுமார் 7 மணிக்கு புளூ மவுண்டன் எக்ஸ்பிரஸ் பிளாட் பாரத்தை அடைந்ததும் இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!! வடநாட்டு ஆதிக்கம் ஒழிக!!! என்ற பெருமுழக்கத்திற்கிடையே தோழர்கள் குகநாதன், புலவர் நா. மு. மாணிக்கம், கரூர்த்தோழர்கள் பாலய்யா, முருகேசன், மயில் ஆகியவர்களுக்கு மலர்மாலைகள் பலர் சூட்டி வரவேற்றனர்.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து, விடுதலையடைந்த தோழர்களுடன் ஊர்வலமாக நகர முக்கியத் தெருக்களில் சென்று ஊர்வலம் "குடி அரசு" ஆபீசைப் போய்ச் சேர்ந்தது. புலவர் மாணிக்கம் அவர்களது சார்பாகவும், மற்ற தோழர்கள் சார்பாகவும் நன்றிகூற ஊர்வலம் கலைந்தது.

* *

29—8—48 தேதி மாலை 5 மணிக்கு சுமார் 100 தொண்டர்கள் வரை சைக்கிலில் ஊர்வலமாகப் புறப்பட்டனர். தோழர் பி. ஷண்முகவேலாயுதம் தலைமையில் ஊர்வலம் மிக சிறப்பாக நடைபெற்றது. ஊர்வலம் காரைவாய்க்கால் மைதானத்தை சுமார் 6-30 மணிக்கு வந்து சேர்ந்தது.

ஆயிரக்கணக்கான பொது மக்கள் ஏற்கனவேயே மைதானத்தில் கூடியிருந்தனர். தோழர் எம். மாணிக்கவாசகம் அவர்களைத் தலைமை வகிக்கும்படி நகர திராவிடர் கழகத் தலைவர் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் சுப்பய்யன், அப்பாவு, என். இ. பாலகுரு ஆகியவர்கள் விடுதலை பெற்று வந்த தோழர்களை வரவேற்றுப் பேசினார்கள்.

அதற்கு நன்றி கூறும் முறையில் தோழர்கள் குகநாதன், பாலய்யா, புலவர் மாணிக்கம் ஆகியவர்கள் பேசினார்கள். புலவர் மாணிக்கம் அவர்களது சொற்பொழிவு மக்களுக்கு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் குறிக்கோளை விளக்கிக்காட்டியது.

கூட்டத்தில் தொண்டர்கள் நன்கொடை வசூலித்தனர். நன்கொடை வரவு ரூ. 12-11-3-யும், ஒரு தோழரால் ஒரு சிறு கல்லும் கிடைத்தது. அந்த சிறு கல்லைக் கடைசியாகத் தோழர் ஷண்முகவேலாயுதம் எடுத்து வைத்துக் கொண்டு "தோழர்களே! நன்கொடை வசூலின்போது டலர் காசு, அணா போட்டிருக்கிறார்கள். கையில் காசு இல்லாத காரணத்தால் அன்பின் மிகுதியால் ஒரு சிறு கல்லையாவது போடலாம் என்று கருதி நன்கொடை வசூலித்த தோழர்களின் மடியில் ஒரு தோழர் ஒரு கல் போட்டிருக்கிறார். அவருக்கு நன்றி செலுத்துகிறோம். இனிக் கல்லை ரொக்கம் பண்ண வேண்டும் அல்லவா? ஆகவே ஏலத்தில் விடுகிறேன் தோழர்களே! என்று கூறிக் காலணா" என்றார். உடனே விறு, விறு என்று ரூ 2—8—0- வரை ஏலம் உயர்ந்துவிட்டது. போதும் என்று கருதி அத்துடன் ஏலம் நிறுத்தப்பட்டு ஏலத்தில் எடுத்த தோழர் எம். நல்லமுத்துவிடம் தொகையைப் பெற்றுக் கொள்ளப்பட்டது. மீண்டும் தோழர் ஷண்முகவேலாயுதம் பேசுகையில்:— இதுவரை ஈரோட்டுக்கு நல்ல பெயர் இருந்து வந்திருக்கிறது. எந்த அரசியல் கட்சியார் ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் அமைதியாகவே நடைபெற்று வந்திருக்கின்றன. ஆனால் ஒரு சில காங்கரஸ்காரர்கள் உணர்ச்சி வசப்பட்டு நாங்கள் வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்க்கிறோம் என்பதை உணராமல் காங்கரஸ்காரர்களை எதிர்ப்பதாக எண்ணிக்கொண்டு சில கலவர ஏற்பாடுகளுக்கு முனைந்திருப்பதாக இன்று மாலை நடந்த ஊர்வலத்தின் போது அறிகுறிகள் தென்பட்டன. உண்மையிலேயே சொல்லுகிறேன்; எங்களுடைய இப்போதைய போராட்டமானது திராவிடநாட்டிலுள்ள எந்தக்கட்சியினரையும் பாதிக்காத சங்கதி, இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் திராவிட நர்ட்டிலுள்ள சகல கட்சிகளும் தனி சுதந்தரமுள்ள, வடநாட்டான் ஆதிக்கமில்லாத கட்சிகளாக இருக்கவேண்டும் என்பதே எங்கள் நோக்கம். எங்கள் போராட்டம் வெற்றிபெற்றால் எல்லாக் கட்சிகளுக்குமே லாபம். எனவே தயவு செய்து எங்கள் போராட்டத்துக்கு ஆதரவளியுங்கள்! அதற்கு மனம் வராதவர்கள் தயவுசெய்து எங்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி வேடிக்கையாவது பாருங்கள்! என்று வேண்டுகிறேன்" என்று கூறிமுடித்தார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் அப்பாவு நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

* *

கோவை மாவட்டத் திராவிடர் கழகத் தலைவர் தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் 31—8—48. தேதி காலை 4½ மணிக்கு திருச்சியிலிருந்து ஈரோடு மார்க்கமாகத் திருப்பூர் சென்றார். அவரை

# இவர்கள் வாயில் நுழையாததை மாணவர்கள் வாயில் திணிப்பானேன்?

"ஸ்குரு லூஸ்"

★

இந்தி தேசிய மொழி; பொது மொழி என்றெல்லாம் மேடைப் பிரசங்கம் செய்யும் வீரர்கள் யோக்கிய முள்ளவர்களானால் இவர்கள் முதலில் இந்தி படிக்கட்டுமே? இனிமேல் காங்கரஸ் கமிட்டித் தேர்தலுக்கு நிற்பவர்களும், காங்க்ரஸ் சார்பாகத் எந்த ஒரு தேர்தலுக்கு அபேட்சகர்களாக நிற்பவர்களும் இந்தி படித்திருக்க வேண்டும் என்று தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி ஒரு உத்திரவு போட்டுப் பார்க்கட்டுமே?

வடநாட்டார் ஆட்டுகிறபடியெல்லாம் ஆடுகிற—ஆடத்தயாராயிருக்கிற இவர்கள் அல்லவா முதலில் இந்தி படிக்கவேண்டும்?

வயது வந்த—அக்கரை உள்ள—அவசியம் உள்ள இந்தப் பெரிய மனிதர்களின் வாயில் நுழையாத ஒன்றை, மாணவர்கள் வாயில் வலுக்கட்டாயமாகத் திணிக்க முயலுவானேன்?

தன்னால் செய்யமுடியாததைப் பிறருக்குப் புத்தி கூறலாமா? குடிகாரன் மதுவிலக்குப் பிரசாரம் செய்யலாமா? மில்துணி போட்டுக்கொண்டு கதர்ப்பிரசாரம் செய்யலாமா? கள்ளமார்க்கெட் வியாபாரி லஞ்சம் வாங்கும் அதிகாரியைக் குறை கூறலாமா? குறை கூறுவானா?

குச்சுக்காரி பத்தினித் தனத்தைப் பற்றி பேசுவாளா?

அப்படிப் பேசுவார்களேயானால் மக்கள் அவர்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

ஒருவர் சொல்வதை மக்கள் கவனிப்பார்களா? ஒருவர் செய்வதை மக்கள் கவனிப்பார்களா?

காங்கரஸ் தோழர்கள் தாராளமாகப் பதவியிலிருக்கட்டும்; நாடாளட்டும்; ஆனால் எந்த ஒரு காரியத்தையும் தங்களாலேயே (காங்கரஸ்காரராலேயே) செய்ய முடியவில்லையோ, அதைச் சர்க்கார் என்னும் பேரால் மக்களைச் செய்யும்படியாகச் சட்டம் செய்யாதீர்கள் என்பது தவறா?

வெள்ளைக்காரனிடமிருந்து அதிகாரத்தை மாற்றிக்கொள்ளும் போது இந்த அடக்கு முறையையும் சார்ஜ் வாங்கிக்கொண்டிருக்கிறீர்களா?

அப்படியானால் வெள்ளையன் காலத்தில் நீங்கள் அவன்மீது கூறிய வசைமொழிகள் எல்லாம் காங்கரஸ்காரர்களுக்குத்தான் "காப்பி ரைட்டா?"

வெள்ளையன் அடக்குமுறையின்விளைவுதானே, வெள்ளையன் வலிய காங்கரசாரிடம் அதிகாரத்தை ஒப்படைக்கவேண்டி நேரிட்டது என்றுதானே காங்கரஸ்காரர்கள் கூறுகிறார்கள்?

அப்படியானால் திராவிடர் மீது அடக்கு முறை தொடுத்திருப்பது வடநாட்டார் அதிகாரத்தை விரைவில் விட்டுவிட்டு வெளியேறப் போகும் நாள் வேகமாக வந்து கொண்டிருக்கிறது என்றுதானே அர்த்தம்?

சாத்வீகப் போராட்டத்தால் ஒன்றும் முடியவில்லை. ஆகஸ்டுப் புரட்சியால்தான் எல்லாம் நடந்தது என்று சொல்கிறீர்களா?

அப்படியானால், எங்கள் தலைவர் பெரியார் அவர்கள் வெளியில் உள்ளவரையிலும் எங்களால் முடியவே முடியாது. நாங்கள் ஏதாவது செய்தால் சர்க்கார் தண்டனையைவிட அவர் விதிக்கும் தண்டனை மிகப்பெரிது; எங்களால் தாங்கமுடியாது.

வெள்ளையன் உத்தமர் காந்தியாரையும், காங்கரஸ் தலைவர்களையும் சிறையில் அடைத்து வைத்திருந்தது போல் இப்போதைய சர்க்காரும் செய்ய வேண்டும் அல்லவா? அப்பொழுது தானே நாங்களும் ஆகஸ்டுப் புரட்சி செய்யமுடியும்?

போனால், போகிறது. செப்டம்பர் முதல் வாரத்தில் தலைவர் பெரியார், திராவிடர்கழகக் கமிட்டி கூட்டுகிறார். அனைவரையும் கைது செய்து விடுங்கள். விட்டு விடாதீர்கள்.

ஆகஸ்டுப் புரட்சியைப் படித்துப் பார்த்து நாங்கள் செப்டம்பர் புரட்சி செய்து விடுகிறோம்.

பிறகு தலைவர்களை விடுதலை செய்து வடநாட்டான் ஏஜண்டு ஆச்சாரியாரிடமிருந்து திராவிட நாட்டுத் தந்தை பெரியார் அவர்களிடம் அதிகார மாற்றம் ஏற்படட்டும். ஆனால் ஒன்று நிச்சயம். எங்கள் திராவிட நாட்டின் முதல் பிரதமமந்திரி தோழர் ஓ. பி. ராமசாமி அவர்கள் தான்! ஆனால் அன்றைக்கு ரெட்டியார் என்ற வால் இருக்காது!

---

ஈரோடு திராவிடர்கழகத் தோழர்கள் எஸ். ஆர். சந்தானம், குகநாதன், ஷண்முகவேலாயுதன், அப்பாவு, பெருமாள், ஊர்துசாமி, என். இ. பாலகுரு முதலானவர்கள் ஈரோடு பிளாட்பாரத்தில் சந்தித்து மலர்மாலைகள் சூட்டி வரவேற்றார்கள். பிறகு அவர் புளூமவுண்டன் எக்ஸ்பிரஸில் திருப்பூர் சென்றார்.

* *

அதே புளூமவுண்டன் எக்ஸ்பிரஸில் சென்னையிலிருந்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் ஈரோடு வந்து சேர்ந்தார். அவர் உடல் நலிவுற்று மிக இளைத்துப் போயிருந்தார். அவரைத் தோழர்கள் வரவேற்று அவருடன் வீடு சென்றனர்.

மாலை 6-30 மணிக்கு காரை வாய்க்கால் மைதானத்தில் ஈரோடு திராவிடர்கழகத் தலைவர் தோழர் எஸ். ஆர். சந்தானம் தலைமையில் வரவேற்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் அப்பாவு, புலவர் மாணிக்கம், ஷண்முகவேலாயுதம் முதலானவர்கள் பேசியபின் தோழர் சம்பத் தன்னை வரவேற்றமைக்கு நன்றி செலுத்தியதுடன் சர்க்கார் 22-ந்தேதி சிறைப்படுத்திய போக்கைக் கண்டித்துப் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிவுற்றது. கூட்டத்தில் உண்டி வசூல்தொகை ரூ. 9—6—6.

---

# இதுவா அழகு?

★

இந்தியை கருப்புச்சட்டை எதிர்க்கிறது. இதுதான் காரணம்: உடனே காங்கரஸ் ஆதரித்து விட வேண்டும்! இதுவா அழகு? இதுவா அரசியல் முறை?

—மா. பொ. சி.

# குடி அரசு

4—9—48 சனிக்கிழமை.


## வெற்றி வெகு தூரம்!
## பொறுப்பு ஏற்கப் பலபேர் தேவை!

★

“இன்றிரவு மெயிலில் திருச்சிக்குப் போகிறேன்”

“போகிறேன் என்கிறீர்களே? போய்விட்டு வருகிறேன் என்று சொல்லுங்கள்”

“அப்படிச் சொல்வதற்கு இல்லை இந்தத்தடவை. இந்தத் தடவை சர்க்கார் சிறைப்படுத்துவதாயிருந்தாலும் போன மாதம் 22-ந் தேதிபோல் பிடித்து வைத்து 27-ந் தேதி விட்டுவிட மாட்டார்கள். சர்க்கார் பிடிக்கவில்லையென்றே வைத்துக்கொண்டாலும் நான் வருவதற்கில்லை. ஏன் என்று கேட்கிறாயா? இந்தத் தடவை கூட இருக்கும் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானங்கள் போட்டு விட்டு வீட்டுக்கு வந்துவிடுவதற்காகக் கூப்பிடவில்லை பெரியார். ஒவ்வொருவரும் என்ன பொறுப்பை ஏற்றுக்கொண்டு வேலை செய்யப்போகிறீர்கள்? என்று கேட்பார் பெரியார். ஒரு சமயம், போராட்டம் தீரும்வரை யாரும் வீட்டுக்குப் போகக் கூடாது என்று உத்திரவிட்டாலும் ஆச்சரியம் இல்லை”

“அப்படியானால் இப்பொழுதே எனக்கும் ஒரு அனுமதி கொடுங்கள்”

“என்ன, உமது தாய்வீடு செல்வதற்கா?”

“சே, ஒருக்காலும் இல்லை. என்னை என்ன என்று நினைத்துக் கொண்டீர்கள்? அப்படியொன்றும் நான் கோழையல்ல. ஒருக்கால் உங்கள் வாழ்க்கைத் துணையால் வேண்டுமானால் எனக்குக் கோழைத்தனம் ஏற்பட்டிருக்கக் கூடுமே தவிர நான் வீரத் தாயின் மகள்! நான் உங்களிடம் அனுமதி கேட்டது எல்லாம் அவசியமானால் பெரியார் அறிக்கை வெளியிட்டால் உடனே நானும், நமது அருமைக் கண்மணி (3 வயது மகன்) யும் சென்னையில் நடக்கும் இந்தி எதிர்ப்பு மறியல் தொண்டர்களாகச் செல்வதற்கு.”

“ஓஹோ! அப்படியா சங்கதி. இதற்கு எனது அனுமதி வேண்டுமா? அது உமது பிறப்பு உரிமை அல்லவா?”

“அப்படியானால், செல்லுங்கள். அதுவும் முதல் ரயிலுக்கே செல்லுங்கள்!”

இம்மாதிரியான பேச்சுக்கள், பெரும்பாலும் திருச்சிக்குப் புறப்பட விருக்கும் மததிய திராவிடர் கழகக்கமிட்டி அங்கத்தினருக்கும் அவரது துணைவியாருக்குமாக நேற்றையத்தினம் சில இடங்களிலாவது நடந்திருக்குமானால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏன் என்றால், நிலைமை அவ்வாறு இருக்கிறது. சர்க்கார் போகிற போக்கைப் பார்த்தால் நியாயமான முறையில் ஜனநாயக ரீதியில் காரியங்கள் நடக்கும் என்று நம்புவதற்கில்லை. பதவியிலிருக்கிற காங்கரஸ் காரர்கள் நமது போராட்டத்திற்கு ஒரு மரியாதை ஏற்பட்டு விடக்கூடாது என்ற வஞ்சகஎண்ணத்தோடு நமக்கென்னமோ, மறியல் செய்ய உரிமை அளித்த மாதிரி நாசூக்காகப்பேசி நமது இயக்கத்தைத் தானாகவே சோர்ந்து செத்துப் போய் விடும் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். ஆனால் பதவியிலில்லாத காங்கரஸ்காரர்களும், தியாகிகளும், பதவியைக் கைப்பற்ற விரும்புகிறவர்களும், பதவியிலிருப்பவர்களால் பாதிக்கப்பட்ட சமூகத்தினரும் ஒன்று சேர்ந்து கொண்டு தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் தோழர் காமராஜருக்கு ஜலங்கை கட்டிவிட்டு பிரதமர் ரெட்டியார் மீது பாணம் தொடுக்கச்செய்து வருகிறார்கள். வெறும்வாயை மெல்லுகிறவர்களுக்கு அவல் கிடைத்த மாதிரி, நமது இயக்கத்தை நசுக்கிப் பொசுக்கி விட வேண்டும் என்று சர்க்காருக்குப் புத்தி சொல்லி வருவதோடு— இல்லை மிரட்டி வருவதோடு— அதைச் செய்யாவிட்டால் ரெட்டியாரை சிம்மாசனத்திலிருந்து இறக்கி விடுவதாகப் பயமுறுத்தி வருகிறார்கள்.

நமது ரெட்டியார் ஆட்சியில் பொது மக்கள் அபிப்பிராயம் எப்படி இருந்தபோதிலும், நிச்சயமாக எம். எல். ஏ- க்களுக்குப் பல விதங்களில் ஆத்திரம் உண்டு. இவரென்ன, போருக்குப்பக்கத்தில் படுத்திருக்கும் காவல்பிராணி மாதிரி தானும் தின்பதில்லை, பிறர் பொறுக்கித்தின்னவும் வழி விடுவதில்லை என்ற கோபம்—வயிற்றெரிச்சல் இல்லாத காங்கரஸ் எம். எல். ஏ. க்கள் இருப்பார்களா என்பதே சந்தேகமாய்த்தான் இருக்கிறது.

அப்படியே ஒரு சிலர் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் அப்பேர்ப் பட்டவர்களெல்லாம் மெள்ள, மெள்ள தோழர் குமாரசாமி ராஜா அவர்களைப் போல மரியாதைக்குக் கட்டுப்பட்டு ராஜினாமா கொடுத்துவிட்டு வெளியேறி விடவேண்டி நேரிடுமே தவிர இனி ஒரு கணமும் நாணயமாய் எம். எல். ஏ. யாக இருந்து கொண்டிருக்க முடியாது. இதையெல்லாம் பார்க்கும்போது நமது பிரதமர் ரெட்டியார் அவர்கள் ஒன்றா பதவிக்கு ஆசைப்பட்டு— மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கவேண்டும்; அல்லது பதவியிலிருந்து விலகி ஒண்ணாம் நெம்பர் பேர்வழிகளுக்கு இடம் கொடுக்க வேண்டும்.

மேற் சொன்ன நிலை இரண்டில் எது ஏற்பட்டாலும் நம்மைப் பொறுத்தவரையில் நிலைமை ஒன்றுதான். அதாவது நமது போராட்டத்துக்கு நாம் மிக மிக அதிக விலை (உழைப்பு, கஷ்ட நஷ்டம்) கொடுத்துத்தானாக வேண்டும். இதுநாள் வரை நடந்து வருவதுபோல் எல்லாம் பெரியார் பார்த்துக்கொள்ளுவார்; நாம் “சிறைசெல்லத் தயார்! சிறை செல்லத்தயார்!!” என்று சொல்லி விடுவதால் மட்டும் நமது கடமை தீர்ந்துவிடாது. சிறை செல்வது அல்ல நமது நோக்கம். சிறைசெல்வதை ஒரு சர்ட்டிபிகேட்டாக வைத்துக்கொண்டு அரசியல் வியாபாரம் செய்ய நாம் இந்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. சிறை செல்லவும் தயார்! என்பதே நமது முடிவாக இருக்கவேண்டும்.

அதே சமயத்தில் இன்றே நம்மை சர்க்கார் சிறைப்படுத்தி விட்டதாக எண்ணிக்கொள்ள வேண்டும். அப்படிச்சொல்வதன் அர்த்தம் இன்றே மத்தியக் கமிட்டி அங்கத்தினர்கள் தங்களை முழு நேர ஊழியர்களாக்கிக்கொண்டு பெரியார் அவர்களது இஷ்டத்துக்கு தங்களைத் தாங்களே ஒப்படைத்துக்கொண்டு விடவேண்டும். பெரியார் அவர்கள் இடுகிற கட்டளையை அப்படியே நிறைவேற்ற வேண்டும். போராட்டம் என்று சொன்னால் எல்லாவிதமான வேலைகளுக்கும் பொறுப்பானவர்கள் தேவை. எல்லோரும் சிறைக்குச் சென்றுவிடுவதினாலேயே எடுத்துக் கொண்ட காரியம் தீர்ந்து விடாது. இன்னும் உண்மையைச் சொல்லவேண்டுமானால் இயக்க முக்கியஸ்தர்கள் என்று இருப்பவர்கள் சிறைக்குச் செல்ல நான் முந்தி, நீமுந்தி என்று போட்டி போடுவதென்றால் அதற்கு உண்மையான கருத்து பொறுப்பை ஏற்க மறுத்து உள்ளே செல்ல விரும்புகிறார்கள் என்று தான் கருதவேண்டும்.

முன் ஆச்சாரியார் காலத்தில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தொண்டர்களுக்குப் பஞ்சம். இப்போது ஆரம்பித்திருக்கும்போராட்டத்துக்குத்தொண்டர்கள் ஆயிரக்கணக்கில்உண்டு. இப்போது மிக மிகத் தேவைப்படுவதெல்லாம் பொறுப்பு ஏற்றுப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திவரத் திறமையும், பொறுப்பு உணர்ச்சியும் உள்ளவர்கள் தான்.

ஆகவே, 4—9—48 தேதியாகிய இன்று திருச்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிடர்கழக மத்தியக் கமிட்டிக் கூட்டத்தின் போது யார் யார் சிறை செல்லத் தயார் என்ற லிஸ்டுப்போடுவதைக் காட்டிலும், யார் யார் சிறை செல்லவும் தயார் என்ற முடிவோடு— ஆனால் சிறை செல்லுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படக் கூடிய மறியல், பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவுகள் என்பன போன்ற காரியங்களில் ஈடுபடுவதை மற்றவர்களுக்கு விட்டு விட்டு—பெரியார் சிறைப்பட்டாலும், தளபதி சிறைப்பட்டாலும், மற்றும் எத்தனை ஆயிரம் பேர் சிறைப்பட்டாலும் போராட்டம் தட்டுத்தடங்கல் இல்லாமல் நடைபெற்று வருவதற்கான காரியங்களில் இப்பொழுது முதல் கொண்டே பெரியார் கட்டளைப்படி தொண்டாற்றத் தயார் என்பதைப்பற்றிப் பேசி செயலில் இறங்கவேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆங்காங்கு உள்ள திராவிடர் கழகத் தோழர்களுக்கு ஒரு வார்த்தை. இனிமேல் "விடுதலை"ப் பத்திரிக்கையை, மேல் ஆபீசிலிருந்து வரும் ஒரு உத்திரவைப் படித்துப் பார்ப்பதுபோல் படிக்கவேண்டும். அதில் பெரியார் அவர்களாலோ, சர்வாதிகாரி அவர்களாலோ அவ்வப்போது என்ன சேதி சொல்லப்படுகிறதோ அவைகளை உடனே உங்கள் ஊரைப்பொறுத்த அளவுக்கு நடத்திக்காட்ட செயலில் இறங்கி விடவேண்டும். உதாரணமாக, பெரியார் அவர்கள் எல்லா ஊர்களிலும் ஊர்வலங்கள் நடத்தச்சொல்லி உத்திரவிட்டால் அதைப் படித்த மறு நிமிஷமே அந்த அந்த ஊரில் ஊர்வலம் நடந்தால் அல்லவா, நன்றாயிருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் வரவில்லையே, இவர் வரவில்லையே, அவர் கருப்புச் சட்டை போடுவதில்லையே என்ற சிந்தனைக்கெல்லாம் இடமில்லை. அப்படி வராமல் ஒதுங்குகிற உருவங்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அப்படி வராமல் ஒதுங்குகிற யோக்கியர்களாவது பரவாயில்லை. அதைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பது அதை விடப்பெரிய பொறுப்பற்றதனமாகும். உண்மையில் இயக்கத்தில்- எடுத்துக் கொண்ட காரியத்தில் கவலை உள்ளவர்களானால், பெரியார் அவர்கள் காலத்திற்குள்ளாகவே திராவிட நாடு திராவிடருக்காக வேண்டுமானால், பெரியார் அவர்கள் அவ்வப் பொழுது அறிவிக்கும் சங்கதிகளை அப்படியே செயலில் செய்ய அனைவரும் தங்களைத் தாங்களே தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

பொதுவாக, நாட்டிலுள்ள மக்களும் இனி திராவிடக் கழகத்தார் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கேட்கப்போவதில்லை; என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்கத் துடியாய்த் துடிக்கிறார்கள். உங்கள் செயலுக்குப் பொதுமக்களிடையே நிறைய ஆதரவு உண்டு. எனவே, தினந்தோறும் படியுங்கள் பெரியார் அறிக்கையை. கட்டுப்பாடாக— அமைதியாக— எவரொருவரும் குற்றம் சொல்வதற்கு ஏதுவில்லாமல்— வடநாட்டுக் கங்காணிகள்- வட நாட்டு அய்ந்தாம் படைகள் உங்களைக் கண்டு ஓடி ஒளிந்து கொள்ளும் வகையில் அல்லது அவர்களும் திருந்தி நம் பக்கம் வந்து சேரும் வகையில் பாடுபடுங்கள் என்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

★

## பச்சிளங் கருவைச் சிதைக்கும்

# பாதகமான ஆட்சி!

★

ஓமந்தூராரின் போலீஸ் ஆட்சி உண்மையாகவே புராண ஆட்சியையும் மிஞ்சிவிட்டது. புராண காலத்தில் நீதி நெறி தவறாத பாண்டியன் என்று ஒருவனைக் கூறி, அவன் தன் பொருளைத் தகாத வழியில் செலவு செய்து தன்னை மோசம் செய்த தன்னுடைய மந்திரியான மாணிக்கவாசகன் என்பவனை, மோசஞ்செய்த குற்றஞ் சாட்டி, சுடுகின்ற ஆற்றுமணலில் கொண்டுபோய் நிறுத்தினான் என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது. அந்தப் புராணமோ அல்லது புராணத்தைப் படித்த யாரோ ஒரு பக்த சிகாமணியோ தான் நமது ஓமந்தூராருக்கு ஆலோசனைகூறுவதாக இருக்க வேண்டும், இல்லாவிட்டால் இந்தியை எதிர்த்து மறியல் நடத்துகிறவர்களுக்கு இப்படிப்பட்ட தண்டனை கொடுக்க அவர் மன மிசைவாரா?

இந்தி எதிர்ப்பு மறியல்காரர்களை சென்னைக்கு 32-வது மைலில் கொண்டுபோய், கொதிக்கும் மணல் நிரம்பிய சவுக்குக் காட்டில் விட்டு விட்டு, வழியில் யாரும் எந்தவிதமான உதவியோ ஒத்தாசையோ செய்யக் கூடாது என்று அங்கங்கே போலீஸ்காரர்களை நிற்கச்செய்து பொது மக்களை அச்சுறுத்தியும், சர்வீஸ்காரர்களை ஏற்றிச்செல்லக்கூடாது என்று மிரட்டியும் கெடுபிடி செய்வாரானால் உண்மையாகவே ஓமந்தூராரின் மனிதத் தன்மையைப் பற்றியே யாரும் சந்தேகித்தால் அது எப்படித் தவறா

ரோஜா முத்தையா

கும்? மேலும் இந்த இந்தி எதிர்ப்பு மறியலில் 8 மாதக் கர்ப்பிணியும் கலந்திருக்க, அந்த அம்மையாரையும் இந்தக் கொடுமைக்கு உள்ளாக்கி, இன்று அவருடைய கருவையும் சிதைத்துவிட்டது இந்தக் கொலைகார ஓமந்தூரார் ஆட்சி என்றால், இந்த ஆட்சிமுறை இன்னும்எவ்வளவு நாளைக்கு நீடிப்பது? என்று கேட்கிறோம். இவருடைய கிருத்திகை விரதமும், ரமணரிஷிகால் கழுவிக்குடிக்கும் பழக்கமும் இந்தக் கொலைகாரப்புத்தியைத்தான் கற்பித்துக் கொடுத்ததா என்று கேட்டால் அதிலென்ன தவறு? வன்னெஞ்சக் கொடுமையை,—ஈவிரக்கமற்ற தன்மையை- கொடிய மிருகத்திடத்திலும் காண இயலாத இந்தப்பண்பை மறைப்பதற்குத்தானா இவருடைய ஆஸ்திக வேஷம் என்றால் அதிலென்ன தப்பு? நல்லவர்போல் நடித்து கொலை செய்வதற்கும் தயங்கேன் என்று காட்டிக்கொண்டு விட்ட இந்த மகானுபாவர் மக்களையாளும் மந்திரி என்கிற பெயரோடு மனிதன் என்கிற உருவத்தோடு எப்படித்தான் நடமாடுகின்றார் என்று மனிதப் பண்பைவிரும்பும் யார்தான் ஆச்சரியமடையாமல் இருப்பார்கள்?

இவருடைய கொடுமையான மூளை ஒவ்வொரு தொண்டரையும் தனித் தனியாய்த் தவிக்கவிட்டுச் சித்திரவதை செய்ய வேண்டுமென்று துணிந்து அடுத்த நாளில் ஒவ்வொரு தொண்டரையும் தனித் தனியாய்ப் பிரித்து, 8 வது மைல் 12 வது மைல் 16 வது மைல் என்ற கணக்கில் இறக்கிவிட வேலை செய்திருக்கிறது. உலகில் கொடுமை செய்யும் மூளைகளுக்கு ஒரு போட்டி ஏற்படுத்தினால், இவரின் அற்புதமான மூளை முதலிடம் பெறும் என்று சொல்வதைத் தவிர, இவரிறந்தால் இந்த யோக்கிய புருஷரின் மூளை பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதைத்தவிர உண்மையிலேயே அஹிம்சையின் வலிமையுணர்ந்த யார்தான் வேறு என்ன சொல்ல முடியும்?

இக்கொடிய சித்திர வதை செய்யும் முறை இவருடைய கண்டு பிடிப்பத்தானா? அல்லது பார்ப்பனீயத்தின் கண்டுபிடிப்பா? என்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. இந்தச் சிசுக் கொலைக்கு உண்மையாகவே மனம் வருந்தி, அதற்குப் பரிகாரமாக மந்திரிப் பதவியை விட்டொழித்து, மானமற்ற செயலுக்குக் கவலைப்பட்டு, மானத்தை நிலை நாட்டும் தமிழரின் அறப் போரில் இறங்குவாரா? அல்லது "முட்டாள்தனத்தினால்நடராசன் இறந்தான்" என்றுதன்னுடையபெருந் தன்மையை, முந்திய இந்தி எதிர்ப்புப் போரின்போது சட்டசபையில் காட்டிக்கொண்ட ஆச்சாரியாரின் காட்டுமிராண்டித் தனத்தைப் பின் பற்றுவரா? அதைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை.

இக்கொடிய சித்திரவதையைக் குறித்து அஹிம்சைவாதிஎன்று சொல்லிக் கொள்ளுகிற எந்த காங்கரஸ்க்காரரும் ஒரு வார்த்தை பேச வில்லை என்றால், ஜனநாயகத்திற்காகப் பாடுபடுகிறோம் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் எந்தப் பத்திரிகைகாரரும் கண்டிக்கவில்லையென்றால் இந்த அஹிம்சைவாதிகள், ஜனநாயகவாதிகள் உண்மையிலேயே மனிதப் பிறவிகள்தானா என்று கேட்க மனம் துடிக்கவில்லையா என்று கேட்கிறேன்.

இந்த ஆட்சி, இன்று நம் சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையிலும் பெரும் பான்மையான திராவிட மந்திரிகளைக் கொண்டதாயிருக்கிறது என்று எடுத்துக் காட்டி வந்தாலும், இந்த ஆட்சியாளர் பனியாவுக்கு மட்டும் அடிமையல்ல, பார்ப்பனர்களுக்கும் தாசாநுதாசர்களாகவே இருந்து வருகிறார்கள் என்பதையும், இவர்கள் சுய புத்திக்கு இப்போதைய ஆட்சியில் கிஞ்சித்தும் இடமில்லைஎன்பதையும், 47 ஆகஸ்ட்

## ஈட்டி

15க்குப் பிறகு இந்த நாட்டுப் பார்ப்பனர்கள் எல்லாம் தங்களைத் தேவர்களாகவே கருதிக்கொண்டும், அப்படியே நடந்து காட்டியும், கூசாமல் எந்தக் கொலைபாதக வேலையையும் செய்வோம் என்று செய்து காண்பித்துக் கொண்டும் வருகின்றார்கள் என்பதையும் வற்புறுத்தி எடுத்துக்காட்டி வந்திருக்கிறதுதிராவிடக்கழகம். திராவிடஇனத்தைச்சிதைத்து உருக்குலைக்கின்ற நாசவேலையை, வஞ்சகப் பார்ப்பனர்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகவே செய்து வருகின்றார்கள் என்றாலும், அதற்கு எல்லாம்தப்பி, அவர்கள்கொடுஞ்சூழ்ச்சிக்கு முற்றிலும் பலியாகி விடாமல், ஓரளவு தன்மானம் கொண்டு விளங்கும் திராவிடத் தமிழ்ப் பகுதியை, "இது தான் சமயம், இப்பொழுதே ஒழித்துக் கட்டிவிட வேண்டியது தான்" என்கிற முடிவுக்கு வந்து தீவிரமாகவே அதைச் செயலிலும் செய்து காட்டத் துணிந்திருக்கிறார்கள். இந்த நாசவேலையில் பார்ப்பானாப் பிறந்த எவனுமே, அவன் கல்லுச் சுரண்டுபவனாயிருந்தாலும், தட்டுச் சுரண்டுபவனாயிருந்தாலும், மாமாவாயிருந்தாலும், மற்ற உத்தியோகஸ்தர்களாயிருந்தாலும்—என் நீதிபதியாயிருந்தாலும்கூட தன் தன் பங்கை விடாமல் செய்து விடவேண்டுமென்று முடிவு செய்து கொண்டு கிளம்பிவிட்டார்கள் என்றே நிச்சயமாகத் தெரிகிறது.

இல்லாவிட்டால் சென்னை 5-வது பிரஸிடென்சி மாஜிஸ்திரேட் கே. இராஜகோபாலன் என்பவர் இவ்வளவு கீழ்த்தரமான முறையில் குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்கும் நேரத்தில் திராவிட இயக்க நடவடிக்கையைப்பற்றிக் கீழ்தரமாகப் பேச முடியுமா என்று கேட்கிறேன்.

இந்த வழக்கு உண்டானதற்குக் காரணங்கூட, ஓமந்தூராரின் முன் யோசனையற்ற, அறிவுக்கோ நியாயத்திற்கோ மதிப்பளிக்காத ஆணவச் செயல்தான் என்றுகூற வேண்டியிருக்கிறது. சென்ற 22-ம் நாள் ஆச்சாரியாரின் பவனியைக் காரணமாகச் சொல்லி, ஒரு பெரிய கொலைகாரக் கும்பலைப் பிடிக்கும் முஸ்தீப்போடு திராவிடக்கழக நிர்வாகக் கமிட்டி மெம்பர்களையும், மற்றவர்களையும் சென்னைப் போலீசார், ஓமந்தூரார் உத்திரவுப்படி சிறைப் படுத்தியதுதான், ஆச்சாரியார் பவனியின் போது சிற்சில இடங்களில் பலாத்காரச் சம்பவங்கள் நிகழ இடங்கொடுத்தது என்றால், இதை எந்த நியாயபுத்தி உள்ளவனும் மறுக்கமுடியாது. அதைப் போலவே அன்று பெரியாரவர்களும் மற்ற தோழர்களும் சிறைப் பிடிக்கப் படாமல் வெளியில் இருந்திருப்பார்களானால், "கட்டிடங்களின் மீது கல் வீச்சு! கார்களின் மீது கல் வீச்சு!" என்கிற சம்பவங்களே நடந்திருக்க முடியாது என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

ஆரியப் பார்ப்பனர்களின் நய வஞ்சகப் பித்தலாட்ட வேலைகளைக் கண்டு ஆத்திரம் பெருகிக் கொந்தளிக்கும் நிலையில் இருந்தாலும், இனப்பற்றுள்ள எந்தத் திராவிடனும் பார்ப்பனர்களுக்கு நஷ்டத்தை உண்டாக்குவது எனகிற அழிவு வேலையில் இறங்கவில்லை. இன்றைய நிலையில் பார்ப்பனர்களுக்கு ஏதேனும் நஷ்டத்தை விளைவிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டால் அது தனக்குத் தன்னாலேயே விளைவிக்கப்படும் பெரும் ஆபத்து என்பதைத் திராவிடன் உணர்வான். அதனால் தான் "புல்லேந்திய கை வாளேந்தும்" என்று கூவிய நேரத்தில், வாளேந்தியகை வாளோச்சியே காட்டவேண்டிய அந்தக் கட்டம் இந்த நாட்டில் நடக்கவில்லை. அவ்வாறே இனிமேலும் அத்தகைய காட்சிகள் நடைபெறக் கூடாதென்றே திராவிடன் ஆசைப்படுகின்றான். திராவிடத் தந்தை நாள் தோறும் இதை வற்புறுத்துகிறார். இந்த நாட்டின் பெரும் பாலான ஏழைப்பாட்டாளி மக்களின் ஒப்பற்ற குரலாய் விளங்கும், பெரியார்

ரவர்களுடைய பேச்சை, கருத்தை, நடத்தையை வேறு எந்த உத்தியோகஸ்தனும் கவனிக்காவிட்டாலும், கருத்துள் கொள்ளாவிட்டாலும் நாட்டிலுள்ள நீதிபதிகள், அதுவும் சுதந்தர நாட்டு நீதிபதிகள் கட்டாயம் கவனித்தே வரவேண்டும். ஏன்? தனிப்பட்ட நபர் என்கிற நிலையையோ, தனிப்பட்ட கட்சியைச் சேர்ந்தவர் என்கிற நிலையையோ கடந்து விளங்கவேண்டியவர் நீதிபதி. கூலிக்காக வேலை செய்யும் உத்தியோகமல்ல நீதிபதி உத்தியோகம். இப்பேர்ப்பட்ட பொறுப்பில் இருக்கவேண்டிய நீதிபதி பேசும் பேச்சா இவ்வளவு கீழ்தரமாய் இருக்கவேண்டும்?

சாந்தோமிற்கு ஆச்சாரியார் பவனி வந்தபோது யாரோ சில இளைஞர்கள் கார் மீது கல் வீசினார்களாம். பிடிப்பட்ட சிலரிடம் கருப்புக்கொடிகளும் இருந்தனவாம். இவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் தான் நீதிபதி கொடியை அவமானப்படுத்திக் கொடுமொழி பேசியிருக்கிறார். ஆம்! அவர் நீதிபதி என்கிற மமதையே தவிர வேறு காரணம் என்ன சொல்ல முடியும்?

ஆச்சாரியார் கார் மீது கல்லெறிந்த செய்கை, அடக்கு முறையால் எழுந்த ஆத்திரத்தின் விளைவு என்றாலும், இதைப்பொறுப்புள்ள எந்தத் திராவிடனும் ஆதரிக்கமுடியாது. திராவிடன் எக்கட்சிக் காரனாயிருந்தாலும் வெட்கப் பட்டேயாகவேண்டும் என்று கூறித் தன் பெரும் வருத்தத்தைப் பெரியாரவர்கள் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே ஆத்திரப்பட்ட இளைஞர்களும் கூட ஆத்திரம் தீர்ந்துபோன பின் தங்களின் செயலுக்குவருந்துவார்கள், வருந்த வேண்டும் என்றே கூறுகிறேன்.

பிடிபட்ட இவர்கள்தான் கல்லெறிந்தவர்களா? கல்லெறிந்ததற்குக் கடுங்காவலா? அதுவும் ஒரு மாதத் தண்டனையா? என்கிற கேள்விகளை நான் கேட்கவில்லை. அது நீதி மன்றத்தின் வேலை. நீதி மன்றம் செய்த தீர்ப்பைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. குற்றவாளி யாராயிருந்தாலும் குற்றத்திற்கான தண்டனையை அனுபவிக்கவே வேண்டும் என்று பேசும் திராவிடன் நான். அப்படியிருக்கத் தண்டனை பெற்றவர்கள் தண்டனையடைந்தது சரியல்ல என்று, ஒரு நீதிமன்றம் விசாரணைக்குப் பிறகு செய்த முடிவை, நான் எப்படி மறுத்துவிட முடியும்? ஆகவே தீர்ப்பிலே குறை காண்பதோ அதை எடுத்துக் கூறுவதோ எனது கருத்தல்ல.

இவ்வழக்கில் தீர்ப்புக்கூறிய நீதிபதி, எதிரிகள் மீது மிகக் கடுமையான சொற்களை வீசியிருக்கிறார் என்றாலும், இங்கு எடுத்துக்காட்ட வேண்டிய அவசியமில்லை. எதிரிகளின் கல்லெறிந்த செயல் "ஆபாசமான அருவெறுக்கத் தகுந்த செயல்" என்பது நீதிபதியின் கருத்து. நானும் அப்படித்தான் கருதுகிறேன். ஆனால் இதை நீதிபதி கூறும்போது எப்படிக் கூறுகிறார்?

"அவர்களுடைய செயலும் அவர்களுடைய கொடியைப் போலவே ஆபாசமாக இருக்கிறது"

என்கிற நீதிபதியின் விளக்கத்தையும், எதிரிகளிடமிருந்து கைப்பற்றப் பட்ட கருப்புக்கொடியை அழித்து விடும்படி மாஜிஸ்திரேட் கூறினார் என்கிற செய்தியையும் எண்ணிப் பார்க்கும்போது இது நடுநிலையிலுள்ள நீதிபதியின் வேலையா? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

கரி பூசினது போன்ற கருப்புக் கொடி என்று வர்ணிக்கும் இந்த நீதிமான், கரி பூசினதுபோன்ற சட்டையைத்தான் இப்பொழுதும் அணிந்து கொண்டிருக்கிறார் என்றால் இவருடைய நீதியும், செய்கைகளும் கரி பூசினது போலவே யிருக்கிறது என அர்த்தமா? இப்படி யாராவது கூறினால் அதை இவர் ஒப்புக் கொள்வாரா?

ஆச்சாரியாரை எண்ணும்போது, தென்னாட்டை வடநாட்டவர்க்கு அடிமைப் படுத்தும், திருப்பணியைச் செய்யும் சேலம் வாசி என்கிற எண்ணம்தான் இந்த நாட்டில் பிறந்தவனுக்கு உண்டாகுமே தவிர, ஒரு வேற்று நாட்டானைப் போல், அல்லது ஒரு நாடோடியைப் போல, அல்லது ஒரு சுய புத்தியில்லாத பூரண அடிமையைப்போல அவரை ஒரு அரசப் பிரதிநிதி என்று எண்ணுகிற எண்ணம் உண்டாகி விட முடியுமா? கண்காணியாயிருக்கும் ஆச்சாரியாருக்குத் திராவிடன் எப்படி களிகூர்ந்து வரவேற்பளிக்க முடியும்?

தன்னுடைய வெறுப்பைக் காட்டும் அடையாளமாகத் திராவிடன் கருப்புக் கொடி பிடித்தான் என்றால், அது எப்படி ஆபாசமாகவும் அருவெறுக்கத் தக்கதாகவும் இருந்ததென்று ஒரு நீதிபதியால் கூற முடியும்? அரசியல் உலகில் கருப்புக் கொடி பிடிப்பது என்பது இதுதான் முதல் தடவையா? கல்லெறிந்த செயல், ஆபாசமான செயல், அருவெறுக்கத் தகுந்த செயல் என்பது மட்டுமல்ல, காண்டுமிராண்டித்தனமான செயல்என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் கண்காணிக்குக் கருப்புக் கொடி பிடிப்பது—பாம்புக்குக் கீரியைக்காட்டுவது எப்படி ஆபாசமாக—கரிபூசினதாக இருக்கமுடியும்?

தன்னினத்தாரின் தனியாட்சி நடக்கின்ற இச்சமயத்தில், தானும் தன் கைங்கரியத்தைச் செய்துவிடவேண்டுமென்கிற ஆசையே தவிர, இக்கொலைகார ஆட்சியில் என்னவேண்டுமானாலும் பேசலாம் என்கிற தைரியமே தவிர, இந்த நீதிபதியின் கொடுமொழிகளுக்கு வேறு என்ன நியாயம் சொல்லிவிட முடியும்? ஆனால் கொடியை அழிப்பதினாலேயே திராவிடனின் வெறுப்பையும், தன்மானத்தையும் அழித்துவிடலாமென்று அவர் கருதியிருப்பாரானால், அய்யோ பாவம் அவருடைய நடத்தை அவர் கருத்தைக் காப்பாற்ற மாட்டாதே! பச்சிளங் கருவைச் சிதைக்கும் பாதகமான ஆட்சியை என்றைக்கும் சதமென்றா இவர் கருதுகிறார்! இக்கொடுமைக்கு அழிவுகாலம் இதோ நெருங்கிக்கொண்டே யிருக்கின்றதே! என்று எப்படி எடுத்துக் காட்டாமல் இருக்கமுடியும்?

## திருமணம்.

மன்னார்குடி கீழ்ப்பாலம் உடையார் தெருவிலுள்ள மணகள் இல்லத்தில் 9-9-48ம் தேதி காலை 6 மணிக்குத் தோழர்கள் S. கருணானந்தம்—நாகரத்தினம் அம்மையார் திருமணம் நடைபெறும்.

# இந்தி எதிர்ப்புப் போர்.

—(□)—

### 12–வது நாள்.

தொண்டைமண்டலப்பள்ளி முன்பு மலபார் போலீஸ் வேலியின் நடுவே மறியல்! மாணவர்களின் உற்சாகமான எதிர்ப்பு முழக்கம்! மறியல் முடிந்த பின் 8 மாதக் கர்ப்பிணியான அம்மையாருள்பட எல்லோரையும் 12-வது 16-வது 19-வது மைல் என்று தனித் தனியாய் பிரித்து இறக்கிவிட அவர்கள் போலீஸ் உத்திரவால் காரோ வண்டியோ இல்லாமல் கால் நடையாய் சென்னை திரும்பினர்.

### 13–வது நாள்.

இன்று வீரத்தாய்மார் ஆறுபேரும் சிறுவர்கள் இருவரும் போர்க்களத்தில் இறங்கினர்! கர்ப்பிணியான அம்மையார் கருவில் கோளாறு ஏற்பட்டு படுக்கையில் படுக்கவேண்டியவரானார்கள். மற்ற ஆண் தொண்டர்களுக்கு ஒரு நாள் ஓய்வு தரப்பட்டு, வெங்கொடுமைக்கு அஞ்சாமல் வீரத்தாய்மார்கள் களத்திலிறங்கவே, பெரும், உற்சாகமும் உணர்ச்சியும் தாண்டவமாடியது. நடுக்காட்டில் இறக்குவதை இன்று போலீசார் கைவிட்டனர். வீரத்தாய்மார்கள்:— தோழியர் கே. ஏ. மணியம்மையார் (கேப்டன்) கண்ணம்மா

ரோஜா முத்தையா

அரசு, புவனேசவரி நடராசன், ஷை யார் மகன் 4 வயது சிறுவன் செல்வம், நாகரத்தினம் கோவிந்தசாமி, கனகம் ப்ரசங்கரய்யா ஷை யார் மகள் 4 வயது சிறுமி நாகம்மாள், துரைக்கண்ணம்மாள், கோதண்டபாணி ஆகியோர்.

## 14-வது நாள்.

இன்றைய மறியலில் தொண்டை மண்டலப்பள்ளி மாணவர்கள் இந்தி ஏடுகளை நெருப்பிலிட எத்தனிக்கையில் போலீசார் தடுத்தனர். தோழியர் துரைக்கண்ணம்மாள் உள்ளிட்ட எல்லாத் தொண்டர்களும் மறியல்முடிந்த பின், போலீஸ் லாரியில் ஏற்றப்பட்டு அடையாறு கடற்கரையில் கடும் வெயிலில் இறக்கிவிடப்பட்டனர்.

## 15-வது நாள்.

இன்று பள்ளி மாற்றம். மறியல் முத்தியாலுபேட்டைப் பள்ளியின் முன்பு. ஊர்வலத்தைத் தொடர்ந்தே மலபார் போலீசாரும் வந்தனர். மறியல் நடந்தபோது மற்றொருபுறம் இவர்கள் 'பரேட்' நடத்தினார்கள். மாணவர்களிடையே கொந்தளிக்கும் உணர்ச்சிக்கு எல்லையில்லை. 'இந்தி படியோம்' எனக் கையெழுத்திட்டு சில மாணவர்கள் தந்தனர். இந்தி ஏடுகளை நெருப்பிலிட்டனர் பலர். எல்லோரும் அணிஅணியாய் எதிர்ப்பு முழக்கத்தோடு பள்ளி நுழைந்தனர். ஆனால் பலர் பள்ளி செல்லவில்லையாம்.

மறியல் முடிந்தவுடன் தொண்டர்களைப் போலீசார் லாரியில் ஏற்றியவுடன் பொதுமக்களிடையே பெரும் ஆத்திரம், இதைத் தலைவர்கள் தணிக்க வேண்டியதாயிற்று. 8 வது மைலில் மாதவரத்துக்கப்பால் இறக்கிவிடப்பட்ட தொண்டர்கள் பிரசாரஞ் செய்து கொண்டு கிராமவாசிகள் பின்தொடர சென்னை திரும்பினார்கள்.

[5ம்பக்கத் தொடர்ச்சி]

அவர்களும் கூலிவேலைகள் செய்து எங்கள் உயிர்போகாமல் காப்பாற்றிக் கொண்டு வருகிறோம். கணவன் வீட்டிலிருந்து வந்து விட்டதால் "வாழா வெட்டி" யென்றும், ஏதோ தப்பு நடத்தையால் கணவன் அடித்து விரட்டிவிட்டான் என்ற வதந்தியும் என்னைமட்டும் விட்டுவிடுமா என்ன? அதுவும் ஏழையென்றால் காணாமல் கூடப்பேசமாட்டார்களே. நம்நாட்டுப் பெண்களுக்கு எது தெரியாவிட்டாலும், தன்னைப்போன்ற ஒரு பெண்ணை இல்லாததும் பொல்லாததும் சொல்லி, இம்சைசெய்து வேடிக்கை பார்க்கத்தான் தெரியுமே! அவர்களின வம்புப்பேச்சு, நான் கணவன் வீட்டில் பட்ட கஷ்டத்தைவிட அதிகம் கஷ்டப்படுத்துகிறது. இது மட்டுமா? நான் கன்னியாய் இருந்தபொழுது என் அழகு கண்ணுக்குத் தெரியாமல் இருந்த பணக்காரர் வீட்டு செல்வக்குமாரர்கள், அப்பொழுது தங்கள் அந்தஸ்திற்குக் குறைவாயுள்ள எனக்கு வாழ்வளிக்க, இப்பொழுது முன் வருகிறார்களாம்! இது திரை மறைவில் நடக்கும் விஷயந்தானே என்ற எண்ணம் போலும். வயிற்றுப் பசியைப் போக்க வாழ்விலே போராட வேண்டிய நிலையில் உள்ள எனக்கு, காதல் பசியைப் போக்க முன்வருகிறார்களாம் கண்ணியர்கள்! நான் என்ன வேளாவேளைக்கு உண்டு களித்து உறங்கிக் கொண்டா இருக்கிறேன், காதல்பசியும் காமப்பசியும் உண்டாக? உடலில் தெம்பும், கையில் வலியும், வேலை செய்யும் பழக்கமும் இருக்கும் வரை என் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ள யார் தயவும் தேவையில்லை. வேலை செய்து உயிர்வாழமுடியும்.

வேலை செய்யவேண்டுமானாலும் யாராவது ஒரு பணக்காரர் வீட்டுக்கோ, காட்டுக்கோ தானே போய் வேலை செய்யவேண்டும்? அங்கிருப்பவர்கள் மட்டும் முற்றுந்துறந்த முனிவர்களா என்ன? வயிற்றுப் பசிக்கு கூலிவேலை செய்யும் வனிதையர்களை, தங்கள் காமப்பசிக்கு இரையாக்க விரும்பும் மனித மிருகங்கள் நிறைந்த சமூகம் தானே இது? அங்குதான் எப்படி நிம்மதியாய் வேலை செய்யமுடியும்? அவர்கள் நோக்கத்திற்கு தடையானால் வேலை தான் எங்குகிடைக்கும்? எப்படிப்பார்த்தாலும் நிராதரவான நான், கட்டிய கணவனால் கைவிடப்பட்டான், அதிலும் ஏழையாய் பிறந்த நான், உயிர் வாழவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? உண்மையில் எனக்கு சாகமனம் இல்லை. வாழவேண்டும் என்று தான் தோன்றுகிறது, ஆனால் உலகம் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருக்குத்தானே வாழ்க்கை என்ற பதத்திற்கு சரியான அர்த்தத்தைக் காண்பித்திருக்கிறது.

உண்மையில் என் வாழ்க்கை தூய்மையானது, களங்கமற்றது. எத்தனை சத்தியம் செய்தாலும் என் கணவரும் மற்றவர்களும் இதை நம்பமாட்டார்கள். இல்லாத ஒன்றை என் மீது இட்டுக் கட்டிவிட்டார்கள். வெள்ளையாகச் சொல்ல வேண்டுமானால் என்னை விபசாரி என்று தூற்றி விட்டார்கள். தங்களின் பண உதவி கொண்டு சிலர் அதை மெய்ப்படுத்தவும் முனைகிறார்கள். நான் உயிர் வாழ வேண்டுமானால் பொருள் வேண்டும். அதை நான் எந்த வகையில் சம்பாதிக்க வேண்டுமானாலும் என் கற்பை விற்க, சித்தமாய் இருக்க வேண்டும், இல்லையேல் பட்டினி கிடந்து சாகவேண்டும். இரண்டில் நான் எதைச்செய்வது? சீர் கேடான சமூக அமைப்பு, விபசாரிகள் உண்டாவதற்குஆதரவையும் சூழ்நிலையையும் உண்டாக்கிவிட்டு, என்போன்றஏழைப் பெண்களைப் விபசாரிகள் எனத் தூற்றியும் விட்டு, விபசாரம் செய்தால் ஒழிய உயிர் வாழ முடியாத நிலையையும் உண்டாக்கி வைத்திருக்கிறது.

இந்த மானங்கெட்ட நாசகார சமூகத்தில் தனிப்பட்ட பெண் ஒருத்தி நாணயமாய் வாழ வழியே இல்லை. விபசாரத்தை ஒழிப்பதாகச் சொல்லி அதன் பெயரால் வயிறு வளர்க்கும் துர்ப்பாக்கியம் மிக்க ஏழைச்சகோதரிகளை, விபசார தடை சட்டத்தின் மூலம் ஊர் ஊராய் விரட்டியடிக்கும் தேசத்தொண்டர்களே, விபசார உற்பத்தியை முதலில் ஒழியுங்கள்! அதற்குச் சாதகமாய் இருக்கும் சமுகத்தை, அதன்கட்டுக்கோப்பை மாற்றி அமையுங்கள்! என் போன்ற ஏழைப் பெண்களை, உங்கள் சகோதரிகளை நீங்கள் பிறந்த தாய்க்குலத்தை இந்த இழிவிலிருந்து விடுவியுங்கள்! இதை விட்டு என்னைத் தூற்றுகிறீர்களே. நான் குற்றவாளியா? காரண மின்றி களங்கமற்ற என்மீது அவச்சொல்லை உண்டாக்கி என்னை விரட்டிய என் கணவனும் அதை ஆதரிக்கும் இந்த சமுகமும் யோக்கியர்கள்! நான் குற்றவாளி! தீர்ப்புக் கூறுங்கள்?

குற்றம் செய்பவனையும், அதற்கு உடந்தையாய் இருப்பவனையும் தண்டிக்கிறது சட்டம். விபசாரம் என்று சொல்லப்படும் குற்றத்திற்குத் தண்டனை, பெண்களுக்கு மட்டும்தான் என்கிறதுசமூகம். இந்தத்துணிச்சலின் காரணமாய்தான், ஆண்கள் பெண்களைத் தைரியமாய் கெடுத்து விட்டு கண்ணியமான, நாணயமான மனிதர்களாய் உலாவமுடிகிறது. இந்த ஒருதலை பட்சமான நியாயம் இருக்கும் வரை என்போன்ற ஏழைகள் எப்படித் தப்பமுடியும்? நான் இதுவரை களங்கமற்றவளே, இனியும் அப்படியே இருக்கத்தான் பிரியப்படுகிறேன். ஆனால்! பணத்திமிராலோ பலாத்காரத்தாலோ பசிக்கொடுமையாலோ வேறு பல சூழ்நிலைகளாலோ நான் பலியாக்கப்பட்டால் அல்லது தவறிவிட்டால் அது என் குற்றமா?

குறிப்பு:— இதில் என் ஊர், பெயர் முதலியவை எழுதவில்லை. நான் ஒருத்திமட்டும் தானா இந்த நிலையில் இருக்கிறேன். எல்லா ஊர்களிலும் என்னைப் போன்ற துர்ப்பாக்கியவதிகள் நிறைய இருக்கத்தான் செய்வார்கள். ஆகையால் ஏதாவது ஓர் ஊர், என்னமாவது ஒரு பெயர் நீங்களாகவே கற்பனை செய்து கொள்ளுங்கள்!

ரோஜா முத்தையா

# அரசியலார்க்கொரு :: :: எடுத்துக்காட்டு!

★

பார்வதி பாலில் தண்ணீர் கலந்ததற்காக அய்ம்பது ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டாள்.

செய்தி.

பாலிலே நஞ்சுகலந்து குழவிக்கு ஊட்டிய மாற்றாந்தாய், ஆறாண்டு கடுங்காவல் தண்டனை பெற்றாள்.

சாராயத்தில் அபினைக் கலந்ததற்கு ராமேசன் குற்றவாளியாக்கப்பட்டுத் தண்டனை அடைந்தான்.

ஸ்வர்ணலதா.

மவுண்ட்பேட்டன் மதாசிகளைத் தமிழில் வாழ்த்துகிறார்.

"அநேக ஆயிரம் பிள்ளைகளைப் பார்க்கரத்துக்கு எனக்கு ரொம்ப சந்தோஷம். நீங்கள் எல்லோரும் நன்றாக ஒன்று சேர்ந்து தமாஷ் நடத்தினீர்கள். நீங்கள் ஒன்று சேர்ந்து ஜனசமூகத்திற்கு சேவை செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன். உங்களுக்கு எனது ஆசீர்வாதம்"

Indian Express 30—1—48.

பார்த்தீர்களா! மவுண்ட்பேட்டன் அவர்கள் சமீபத்தில் சென்னை வந்தபொழுது 'கார்ப்பரேஷன் ஸ்டேடியத்'தில் பேசினார்—படித்தார்மேலே காட்டிய தமிழ் மணிவாசகங்களை. இது அவருக்குத் தமிழிடத்தும், தமிழரிடத்தும் உள்ள அளவற்ற காதலைக் காண்பிக்கிறது அல்லவா?

அவருக்குத்தான் தமிழே தெரியாதே, எவ்வாறு பேசினார் என்று கேட்கிறீர்களோ? ஆம். அவருக்குத் தெரியாது தான். எனவே அவர்தம் தமிழ் நண்பரோ அன்றி தமிழ் மந்திரிகளில் யாரேனும் ஒருவரோ இத்தமிழ் வாக்கியங்களை எழுத்துப் பெயர்த்துக் கொடுத்திருக்கவேண்டும். சென்னை அரசாங்கத்தினருக்கும், அவர்தம் தலைவருக்கும் தமிழின் மீதுள்ள அளவிறந்த ஆர்வம் தான் என்னே! முயற்சியின் மேன்மை செப்புந்தரமோ?

யாரோ ஒருசிலர் கூறுகிறார்களே இந்த அரசாங்கம் தமிழைத் தொலைக்கப்பார்க்கிறது, கலையை அழிக்க முயலுகிறது, ஆச்சாரத்தை ஆனாச்சாரம் ஆக்குகிறது என்றெல்லாம். இது எவ்வளவு சுத்தப்பொய் என்பதை நம் அரசாங்கம், காங்கரஸ் அரசாங்கம், கருணையே உருவெடுத்த ஓமந்தூரார் அரசாங்கம் முன்கூட்டியே மவுண்ட்பேட்டன் மூலம் செயலில் நிரூபித்துக் காட்டவில்லையா?

மேலும் தமிழைக்காக்க மொழிக்கு முதன்மை, குறளுக்கு முக்கியம் கொடுத்ததுயார் என்று நான்கேட்கிறேன். இதன் காரணம் காங்கரஸ் அல்லவா? அவினாசி அல்லவா? இவ்வளவு உயர்ந்த பெருங்குணத்தைக் கொண்ட மந்திரிமார்களை, பாமர மக்களின் கல்வி அறிவின்மையை உபயோகித்து பதவியைப்பெறச் சூழ்ச்சி செய்யும் யாரோஒருசில நாசக்காரர்கள் தங்கள் வெறுப்பைக்காட்டி பகிஷ்கரிக்கிறார்களே இதுநீதியா? நேர்மையா?

*　　　*

தங்கள் 'சர்க்கார் தமிழ்'த் தென்றலைக்கொண்டு தமிழில் வாக்கியம் இயற்றச்செய்தார்களே இதிலிருந்து என்ன தெரிகிறது? சென்னை அரசாங்கமும் தமிழ் வல்லுநர்களைத் தன்னகத்தே பெற்றுள்ளது என்பது தெளிவாகவில்லையா? இத்தமிழ்த் தென்றலின் ஆசிகொண்டுதானே (இந்தியால் தமிழ் தாழ்வுறும்) இந்தியைக் கட்டாய பாடமாக (விருப்பப் பாடமாக) ஆக்கி இருப்பார். இந்த சர்க்கார் தமிழ்த் தென்றலுக்குத் தெரியாததா நாட்டு அன்பைப்பெற்ற "தமிழ்த் தென்றல்" அறிந்திருப்பார், அல்லது 'மறைமலையடிகளார்' உணர்ந்திருப்பார். ஏதோ இன்று ஒரு சிலர் கூட்டத்திற்கு உதவியாக இருந்தால் பின் ஒரு அவினாசியாக மாறலாமே என்ற பதவிப் பித்துக்கொண்டுதானே அன்று கூடினர் 'மெமோரியல் கூடத்திலே'.

இவர் தம் தலையாய எண்ணம் திராவிடர் கழகத்தைத் தூண்டிலாகக் கொண்டு, மொழியைப் புழுவாக உபயோகித்து, மீன் எனும் பதவியைப் பிடிக்க எத்தனிக்கும் எத்தனிப்பே.

மறுபடியும் ஒருமுறை மவுண்ட்பேட்டன் வாக்கியங்களைப் படித்துப் பாருங்கள். நன்றாக, விழிப்புடன், குரோத உணர்ச்சியின்றி தமிழ் எனும் இன்பக்கண்கொண்டு நோக்குங்கள்; கட்சி வேற்றுமைக் கண்ணை மூடிக்கொண்டு தமிழன் என நோக்குங்கள். எவ்வளவு அழகாக அமைந்துள்ளது, நல் நிலை பெற்ற நான்கு வாக்கியங்களும். மவுண்ட்பேட்டன் (ஆங்கிலேயர்) தமிழில் பேசி இன்பமடைய வேண்டும் என்ற எண்ணத்திற்கு உதவிய சென்னை அரசாங்கத்தின் செந்தண்மைக்குச் செவிசாயுங்கள். வாக்கியங்களைத் தமிழில் தொகுத்த 'அரசியல் உதவியாளா'க்கு நம் வணக்கம். மறுபடியும் படித்தீரல்லவா? 'சந்தோஷம்,' 'தமாஷ்,' 'ஜனசமூகம்,' 'சேவை,' 'ஆசீர்வாதம்' இவைகள் நீங்கள் அறிந்ததுதானே? தமிழ் அகராதியிலிருந்து தானே 'சர்க்கார் தமிழ் தென்றல்' பொறுக்கியிருப்பார். இல்லை. இது தமிழ்ச் சொற்கள் என்று கூறுகிறீர்களோ? நன்றாகத் தெரிந்து தெளிந்து கூறுங்கள். இப்பொழுதும் கூறுகிறீர்களா தமிழ் அல்லவென்று. நல்லது, நான்கு வாக்கியங்கள் பேசப்பட்டது. மூன்று சொற்கள் சமஸ்கிருதம், இரண்டு இந்தி. ஒன்று 'நிரம்ப' என்னும் சொல்லை வெட்டிச் சிதைத்து 'ரொம்ப' என்று திரித்தனர்.

அந்நிய மொழி கட்டாயம் என இல்லாத பொழுதே நான்கு தமிழ் வாக்கியங்களில் அய்ந்து அந்நிய சொற்கள் இருந்தால், சர்க்கார் கருதும் கட்டாய பாடமாகிய (விருப்பப்பாடமாகிய) இந்தி வந்தபின் தமிழ் வாக்கியங்களை எடுத்துப் பார்க்க முடியுமோ?

தலைப்பிலே கூறப்பட்ட பார்வதி, பாலில் தண்ணீரைக் கலந்ததால் அபராதம் விதிக்கப்பட்டாள். காரணம் பாலின் மேன்மை சிதைவுறும்.

மாற்றாந்தாயின் பாலின் நஞ்சு குழந்தையின் உயிரைப் போக்கும் வன்மையது. ஆகவே அவள் தண்டனை பெறுதல் நியதி. அந்தச் சண்டாளி மனம் மாறும் வரை அவள் தண்டனை அநுபவித்தல் வேண்டும்.

பாலுக்கும் குழந்தைக்கும் ஏற்பட்ட இவ்விஷயத்திலேயே தீர்ப்பு இவ்விதம் என்றால், என்று தோன்றியது என்று அறிய இயலாத தமிழுக்கு, தமிழ் என்னும் அமுதத்திற்கு, இந்தி என்னும் நஞ்சைக் கலக்க முற்பட்டால் நம் தமிழ் நெஞ்சம் அதைப் பொறுக்க முடியுமா? அன்றி ஒறுக்க முடியுமா? என்பதைத் தாய்மொழிப் பற்றுள்ளவர்கள் தீர்ப்பளிக்கட்டும்.

நம் தீந் தமிழை ஒரு ஆயிரம் ஆண்டுகளில் சவக்குழியில் புதைத்து விட்டு (குடியேற்றமடைந்தவர்களால் மணவினையில் மாண்ட தமிழ், நிரந்தரம் பெற்று அவர்கள் இருக்கும் இப்பொழுது மக்களிடையேயும் மாளாது என்பதற்கு என்ன உத்திரவாதம் இந்தி நுழைப்போர் கூற முடியும்.) அவ்விடத்திற்குச் சமஸ்கிருதம் கொணர (இது அரசாங்கம் விரும்பாதது. ஆனால் 'அவர்கள்' கொண்டு வந்து விடுவர்.) இந்தி கட்டாயப் பாடமாக ஆக்கப்படுகிறது. எனவே இந்தி நஞ்சு தமிழ்ப்பாலில் கலக்கப்படுமுன்னர் தமிழ்மொழி அன்பர்கள் அனைவரும் தமிழைக்காக்க முற்படுங்கள். 'தமிழ்க் குழு' ஒன்று ஏற்படுத்துங்கள். அது நீதி மன்றத்தின்முன் ஒரு வழக்குக் கொணர்தல் அவசியம். ஏன்? தமிழ் எனும் பசும் பாலில் நஞ்சாகிய வேற்று மொழி கலக்கப்பட்டதற்கு. தண்டனை அடைவான் வேற்றுமொழி நஞ்சைப் புகுத்தியோன். அவனுடன் உடந்தையாளனும் அநுபவிப்பான்.

இவ்வுடந்தையானனுக்கோ நாம் மகிழ்ச்சி என்றால் அவன் மனம் குமுறும்; வணக்கம் என்றால் அவன் வாய்கசக்கும்.

இறுதியாக, தூய தமிழில் மவுண்ட் பேட்டனிடம் வாக்கியங்களை அமைத்துக் கொடுக்காமல், வேற்று மொழிச் சொற்களைக் கலந்து கொடுத்து ஏமாற்றியதற்காகத் தமிழ் உலகம் தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இனியும் இத்தவறு ஏற்படாதவாறு பாதுகாத்தல் அதன் வருத்தத்தைப் போக்கும் வழியாகும். இதுவே சீரிய முயற்சியாம்.

வாழ்க தமிழ்! ஒழிக கட்டாய இந்தி!

"இயலன்பன்"

---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சரி' ஆசிரியர் 'சொக்கலிங்கம்', 'அண்ணா'வின் திறமையான கட்டத்தை, மறைத்து, திரித்துக்கூறி, மந்திரிமார்களின் நடிப்பை உயர்த்திப்பேசி, பொதுமக்களிடையே தவறான விளம்பரத்தைச் செய்திருக்கிறார்! 11-8-48 புதன்கிழமை 'தினசரி' இதழில் முதல் பக்கத்தில் 'இந்தி எதிர்ப்பு நாடகம்' என்று விளம்பரப்படுத்தியிருக்கிறார்! அது தவறு! 'இந்தி நாடகம்' என்றுதான் போட்டிருக்க வேண்டும்! சரி! எப்படியோ போகட்டும்! 'கம்பெனி கையாளும் தந்திரங்களில் அதுவும் ஒன்றுதானே!

நாடகம் மட்டும் வெகு அருமை! பார்க்கப்பார்க்க ருசிகரமான சம்பவங்களைப் புகுத்தி இருக்கிறார்கள்! அதைவிடப் பாராட்டத் தக்கது, கதா பாத்திரங்களுக்குத் தக்கவாறு நடிகர்களைப் பொறுக்கி இருப்பது! 'அண்ணா'வின் போராட்டக் கட்டத்தைக் காணும் போது 'நாமும் தமிழ்'க் கன்னியின் குமாரர்கள்' தானே என்று இரத்தம் கொதிக்கிறது! எல்லா குமாரர்களும் 'போர் களத்தில்' இறங்க, இனி தொடர்ந்து நடக்கும் நாடகங்களில் நடிக்க, ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாக 'தமிழ்நாடு தேசிய நாடக சபா'வினர் அறிவிக்கின்றனர்! அளித்தால் மிகவும் நல்லது! ஆனால் 'தினசரியார்' மட்டும் தன் தவறான 'நாடக விளம்பரங்களை'க் கொடுப்பதைக் கண்டிப்பாக நிறுத்திவிட வேண்டும்! எப்படி ரசிகர்களே? 'இந்தி நாடகம்'!

"தி. வீ. பாலு"

[3ம் பக்கத் தொடர்ச்சி]

திராவிடப் பொதுமக்கள் எப்படித்தான் இந்தச் செய்தியையறிந்து அங்கங்கே வந்து நின்றார்களோ தெரியவில்லை. ஒரே முழக்கம், வாழ்த்தொலி. கண்காணி ஆட்சி ஒழிக! அடக்கு முறை ஆட்சி ஒழிக! வடநாட்டு ஆதிக்கம் ஒழிக! ஆச்சாரியே திரும்பிப்போ! போன்ற ஒலிகள் நாங்கள் போலீஸ் கமிஷனர் ஆபீஸ் சென்றடையும் வரை விடாதொலித்தன.

போலீஸாருடைய ஆறுவான்கள் (கார்கள்) கூட்டத்தினரைக்கொண்டு வந்தபிறகு, பெரியாரவர்களும்தாய்மார்களும் பாதுகாப்போடு பெரியார் அவர்களுடைய காரில் வந்து சேர மணி $11\frac{1}{4}$ ஆகிவிட்டது. கமிஷனர் ஆபீஸில் நாங்கள் அனைவரும் ஒரே அறையில் தான் இருந்தோம்.

நேரம் ஆக ஆக அங்கிருந்த அனைவருக்கும் பசி அதிகரித்தது என்றே கூறவேண்டும். அந்த அறையின் பல திசைகளிலிருந்தும் "தண்ணீர் தண்ணீர்" என்ற ஒலி வரத்தலைப்பட்டன. அங்கு நின்ற உதவிக் கமிஷனரிடம், கைதியாக்கப்பட்ட சென்னைத் தோழர்கள் தெரிவிக்கவே டீ கமிஷனர் தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்தார்.

ஒரு பெரிய வெண்கலக் கொப்பறையில் தண்ணீர் கொண்டு வந்து போலீஸ்காரர்கள் அறைக்குள் வைத்துவிட்டார்கள். ஆனால் யாரும் தண்ணீர் குடிக்கவேயில்லை. "இது என்ன உண்ணாவிரதமா" என்று எண்ணாதீர்கள். காரணம் டம்ளர் வரவேயில்லை. இந்தச் சமயத்தில், அந்தக் கொப்பறை மனமிரங்கினது போல எங்களை நோக்கித் தண்ணீரை அனுப்பியது. காரணம் கொப்பறை ஓட்டை. உடனே 2 தோழர்கள் அதை வெளியில் கொண்டு போய் வைத்தார்கள். பிறகு பகல் 1 மணியைப்போல ஒரு டம்ளர் வந்து சேர்ந்தது.

பகல் 2 மணிக்கு மேல்தான் போலீஸ் கமிஷனர் நாங்கள் இருந்த அறைக்கு வந்தார், நாங்கள் போய்ச் சேர்ந்தபின் சுமார் 3 மணி நேரங் கழித்து. அதற்கு முன்னால் போலீஸ் அதிகாரிகள் எங்களுடைய பெயரையும், ஊரையும், வயதையும்,தொழிலையும் விசாரித்துக் குறித்துக்கொண்டிருந்தார்கள். அப்படிக் குறித்துக் கொள்வதற்கு முன்னால் சம்பந்தமில்லாதவர்கள் யாராவது இருந்தால், தெரிவித்து விட்டு வெளியேறலாம் என்று போலீஸ் அதிகாரிகள் அறிவிக்கவே, வெளியூர்த் தோழர்களைச் சந்திப்பதற்காக வந்திருந்த சில நண்பர்கள் (ஆண்களும் பெண்களும்) சுமார் 5, 6 பேர், "நாங்கள் இந்தக் கூட்டத்திற்காக வரவில்லை, நண்பர்களைச் சந்திக்க வந்து கீழேதான் நின்று கொண்டிருந்தோம்" என்றும் "கார் ஓட்டிக்கொண்டு டிரைவ்ராக வந்தேன்" என்றும் கூறிக்கொண்டு போகவேண்டுமென்றனர். அதைப் போலீஸார் அனுமதித்தனர். காரியக் கமிட்டி மெம்பர் 24 பேர் தவிர மற்றவர்களுக்கு அந்தக் கூட்டத்தில் உண்மையில் சம்பந்தமில்லை என்றாலும், எங்களுக்குச் சம்பந்தமில்லை என்று சொல்வது ஒரு வகையில் மன்னிப்பேயாகும் என்பதை யுணர்ந்து,அவ்வாறு கூறுவதற்கு 71 பேர்களில் அங்கு யாரும் தயாராயில்லை. கமிஷனர் வந்தவுடன், பெயர்களைப் படிக்கச் செய்து சரி பார்த்துக் கொண்டபின் "நீங்கள் எல்லோரும் 151வது செக்ஷன்படி அரஸ்ட் செய்யப்பட்டிருக்கின்றீர்கள்" என்றும், "30—8—48 வரை ரிமாண்டில் வைத்திருக்கக் கேட்டிருக்கிறோம்" என்றும் "பொது ஜன அமைதியைக் குலைப்பதாகத் தெரியவருவதால் இந்தச் செக்ஷனைக் கொண்டு உங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிற"தென்றும் கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல் ஆங்கிலத்தில் பேசினார். பிறகு போலீசாரால் உங்களுக்கு ஏதாவது தொந்தரவு ஏற்பட்டதா என்று அவர் அதே குரலில் கேட்கத் தலைவர் பெரியார் அவர்கள், பலமாகத் தலையை அசைத்து, "அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை, மிகவும் நல்ல முறையில் நடத்தினார்கள், அதற்கு எங்களுடைய நன்றி" என்று கூறினார்கள்.

பக்கத்திலிருந்த ஒரு போலீஸ் அதிகாரி, [கிளார்க்கோ, இன்ஸ்பெக்டர் வகையறாவோ தெரியவில்லை, ஆனால் ஒரு அய்யர்] உடனே இன்னும் ஒரு பத்து நிமிஷத்தில் உங்களுக்குப் பகலுணவு தயாராகிவிடும், ஏற்பாடு செய்துவிட்டோம் என்று கூறினார். மனுஷன் சத்திய சந்தன் என்றால் அந்த மனுஷனைத்தான் சொல்லவேண்டும். ஏனென்றால் அவர் கூறிய முக்கால் மணி நேரங் கழித்துச் சுமார் $2\frac{3}{4}$-மணிக்குத்தான் நாங்கள் அங்கிருந்து மறுபடியும் போலீஸ்வான்களில் ஏற்றப்பட்டோம். அதுவரைக்கும் அங்கு உணவு இல்லை. 3-மணி சுமாருக்கு பெனிட்டன்ஷியரி முன்னால் நாங்கள் கொண்டுவரப்பட்டோம். ஆனால் சரியாக நாங்களெல்லாம் 4-மணிக்குத்தான் காரிலிருந்து இறங்க அனுமதிக்கப்பட்டோம். ஏனென்றால் அப்பொழுதுதான் உணவு வந்து சேர்ந்தது.

$3\frac{1}{2}$-மணியளவில் பெரியாரவர்களும் சர்வாதிகாரியவர்களும் தாய்மார்கள் மூவரோடும்,ஏனைய தோழர்கள்நால்வரோடும் சிறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு விட்டார்கள் என்றாலும், பாதி வெந்ததும், வேகாததுமாய் அவசரத்தில் ஆக்கப்பட்ட சோற்றை அப்பளத்தோடு எப்படியோ கொஞ்சம் உள்ளே தள்ளிவிட்டு, $4\frac{1}{2}$-மணியிலிருந்து 10, 10-பேராக நாங்கள்

உள்ளே அழைத்துச் செல்லப்பட்டோம். நானும் எனது மற்றைய நண்பர்கள் சிலரும் செல்லும்போது மணி 6½-க்கு மேல் இருக்கலாம். எங்களுக்குப் பின்னால், நாங்கள் உள்ளே போகும்போது வெளியில் 15-பேர் நின்றார்கள்.

சிறை பிடிக்கப்பட்ட செய்தி ஒரு மணி நேரத்திற்குள் நகரெங்கும் பரவியிருக்கவேண்டும். இல்லாவிட்டால் பெனிட்டன்ஷியரிக்குமுன்னால் சென்டரல்—மவுண்ட்ரோடுவழியிலுள்ள நீண்ட பாலத்தின் மீது வரிசையாக 5000க்கு மேற்பட்ட இளைஞர்கள் கூடி நின்று, நாங்கள் போய்ச் சேர்ந்தவுடனேயே எப்படி ஒலி முழக்கம் செய்திருக்க முடியும்? நேரம் ஆக ஆகக் கூட்டம் பெருகி, போலீஸ் அணையைத் தாண்டி, நாங்கள் நின்று கொண்டிருந்த பக்கம் வழிந்தோடி வந்ததென்றாலும், நாங்கள் அதை விரும்பாமல் சைகை செய்து நிறுத்த வேண்டியதாயிற்று.

உள்ளே போவதற்கு ஏன் இவ்வளவு நேரம்? என்று எவரும் எண்ணலாம். கைது செய்யப்பட்டவர்களின் உடைமைகளை யெல்லாம் வழியிலிருக்கிற ஜெயில் அதிகாரிகள் வாங்கிக் கொள்கின்றார்கள். தங்கம், வெள்ளி நகைகள், ரூபாய்கள், அன்றாட உபயோகத்திற்குத் தேவையில்லாத மற்ற எல்லாப் பொருள்களையுமே அவர்கள் வாங்கி வைத்துக் கொள்ளுகிறார்கள். இங்கு தோழர்கள் எச்சரிக்கையாக இல்லாவிட்டால் ஏமாந்து போக வேண்டியதுதான். ஏனென்றால் சாமான்களை எழுதிக்கொள்ளுகிறவர் ஆங்கிலத்தில் எழுதிக்கொள்ளுகிறார். இங்கு நான் பார்த்த ஒரு சம்பவத்தைத் குறிப்பிட்டால் அது சரியாக இருக்கும்.

என்னோடு சேர்ந்து 10 பேர் கணக்கில் வந்த எனது நண்பர்களிலொருவர், தன்னிடமிருந்த 130ம் சொச்ச ரூபாயைக் கொடுக்கவே, அதை ஒருகான்ஸ்டபிள் எண்ணிச்சொல்ல, எழுதியவர் 30ம் சொச்ச ரூபாயாக எழுதிக் கொண்டு விட்டார். இதைப்பார்த்த எனது மற்றொரு நண்பர் ஞாபகப்படுத்திய பிறகு, அந்தத் தொகை சேர்த்து எழுதிக் கொள்ளப் பட்டது. இந்த நிகழ்ச்சி அந்த அதிகாரியின் அஜாக்ரதையினால் எற்பட்டதாகத்தான் இருக்கவேண்டும். ஆனாலும் இதிலிருந்து நாங்கள் முடிவு கட்டியது, சிறைக்குள் வரும்பொழுது எப்பொருளையும் உடன் கொண்டு வராமல் இருப்பது நல்லது, அதுவும் மறந்தும் கூட வைரநகை போன்றவைகளை அணிந்திருக்கக்கூடாது என்பதாகும். ''டைமண்ட்ரிங்'' (வைர மோதிரம்) என்று எழுதிக் கொள்ளப்பட்டது ஏன் ''ரெங்கோன் டைமண்ட் ரிங்'' காகப் பின்னர் இருக்கக் கூடாது என்பதை எண்ணும் போது அது அப்படியும் ஆகவழியுண்டு என்றே எங்களுக்குப் பட்டது. ஆனால் எங்கள் 95 ல் ஒரு சிலர் வைர நகைகளும் அணிந்து தானிருந்தார்கள், மற்ற நகைகளும் அணிந்துதானிருந்தார்கள், 3000 க்கு மேல் ரொக்கமாகவும்தான் கொடுத்திருந்தார்கள். அப்படி ஒன்றும் மாறுபாடான வேலை பின்னால் நடந்துவிடவில்லை என்பதை இங்கேயே குறிப்பிட்டு விடுகிறேன்.

தண்டனையடைந்து கைதிகளாக உள்ளே நுழைவதாயிருந்தால், முக்கியமாக 'சி' வகுப்புக் கைதிகளுடைய உடைகளையும் வாங்கி வைத்துக் கொண்டு சிறை உடையைத் தருவார்களாம். நாங்கள் 'ரிமாண்ட்' என்ற காரணத்தால் எங்களுக்கு அங்கு உடை மாற்றம் ஏற்படவில்லை.

உள்ளே நாங்கள் சென்றவுடன் ''குளோஸ் பிரிஸனர்ஸ்'' என்ற தனித்தனிக் கொட்டடியுள்ள பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு நுழைந்ததும் எங்கள் கைகளில் ஒவ்வொரு அலுமினியத்தட்டும் அலுமினியக் குவளையும் கொடுக்கப்பட்டது. சாப்பிடுகிறீர்களா என்று கேட்டதற்கு நாங்கள் வேண்டாமென்று சொல்லிவிடவே பட்டணம் படியில் பாதியாய் இருந்த அந்தக் குவளையில் தண்ணீரைப் பிடித்துக் கொண்டு ஒருவர் வழிகாட்ட நாங்கள் மேல்மாடி ஏறினோம். ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு தோழர்கள் நின்று கொண்டிருக்க, வெளியில் பூட்டப்பட்டிருப்பதைப் பார்த்துக்கொண்டே நடந்த நானும் திறந்திருந்த ஒரு அறையில் நுழைந்தேன். சற்றுநேரத்திற்கெல்லாம் ஒருவர் வந்து நானிருந்த அறையைப் பூட்டிக்கொண்டு போனார். மேலும் 5 நிமிஷங்கழிந்தவுடன் சணலால் வேய்ந்த ஒரு விரிப்பையும் கம்பளிப் போர்வையையும் கொடுத்துக் கொண்டே மற்றொருவர் நடந்தார்.

அறையைச் சுற்றிப்பார்க்க ஆரம்பித்தேன். முழுதும் செங்கல்லும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட அறை. 6 அடிக்கு உயரமான கம்பிக்கேட்டுக்கு எதிரில் அறையின் உள்ளே சிமெண்ட் பூசப்பட்ட படுக்கை—ஒரு சாண் உயரமுள்ள அந்த சிமிண்ட் மேடையில் தலைவைப்பதற்காகச் சற்று உயரமான மற்றொருசிமிண்டினாலாகிய அதனோடு பொருத்தியுள்ள கட்டை. கதவுப் பக்கத்தில் மற்றொரு மூலையில் மண் கலயம். கலயம் இருந்த மூலையில் ஒரு சிறு தள்ளு கதவு.

விரிப்பையும் கம்பளியையும் வாங்கின நான், மேடையில் விரிப்பை விரித்துக் கம்பளியை ஒருபக்கமாக வைத்து விட்டுச் சட்டையைக் கழற்றி விட்டுப் படுக்க ஆரம்பித்தேன். தூக்கம் வரவில்லை. எதிர்த்த வரிசையிலிருந்து கைதிகளின் ஆலாபனம், கனைப்பு வெவ்வேறு கர்ணகடூரமான முறையில் வரஆரம்பித்தன. மேடையை விட்டு கதவை நோக்கி நடந்து சற்று நேரம் நின்றேன்.

தனிமையும், கர்ணகடூரமான ஒலியுமே நிறைந்த அந்த அறையில் இருளை விலக்கி ஒளி தந்து கொண்டிருந்த சந்திரனின் அருமையை நான் அப்பொழுது வெகுவாக ரவித்தேன். நேரம் சற்று கழியவே, குடும்பத்தைப் பற்றிய எண்ணம் என்னைப் படர ஆரம்பித்தது. அதைப் பற்றி எண்ணவே கூடாது என்று முடிவு கட்டிக் கொண்டேயிருந்தேன் என்றாலும், மீட்டும் மீட்டும் அவ்வெண்ண அலையால் தாக்கப்பட்ட நான், மேடையை நோக்கிச் சென்று விரிப்பையும் கம்பளியையும் எடுத்து கீழே போட்டுவிட்டுப் படுக்க ஆரம்பித்தேன். தூக்கம் வரவேயில்லை. தூக்கம் வருவதற்கு வேறு குறுக்கு வழியைக் கடைப்பிடித்தேன்.

மிகுந்த மன ஒருமைப் பாட்டுடன் 1, 2. 3, என்று எண்ண ஆரம்பித்து எண்ண, எண்ண அந்த எண்ணிக்கையின் உருவங்களுக்கு மனதில் இடங்கொடுத்துக் கொண்டு வரவே சில நிமிஷங்களில் தூங்கிவிட்டேன். வைகறைக்காலம் 5-மணிக்கெல்லாம் விழித்துக்கொண்டேன் என்றாலும், இனிச் சிறையில் எப்படி நடந்து கொள்ளுவது? எப்பொழுது கதவு திறக்கப்படும்? என்பவைகளை எண்ணுவதிலேயே எஞ்சிய நேரத்தைக் கழித்துக்கொண்டிருக்கையில் தோழர்களின் பேச்சுக்குரல் கேட்க ஆரம்பித்தன. இந்தக் குரல் அடுத்த அறைகளிலிருந்து வந்ததல்ல. சாதாரணமாகப் பேசுவது அடுத்தடுத்துக் கேட்கமாட்டாது என்பதைப் பின்னர் கண்டேன். வந்த குரல்கள் நானிருந்த அறைக்கு 5-வது 6-வது அறையாக பக்கவரிசையில் இருந்த காரணத்தாலும், பேசிய குரல்கள் கனசாரீரமாயிருந்த காரணத்தாலும் அவைகள் தெளிவாகக் கேட்டன. அதைக் கேட்டு நானும் சட்டையைப் போட்டுக்கொண்டு 'கேட்' கம்பியைப் பிடித்துக்கொண்டு நிற்கவே, ஒரு வார்டர் வந்து எதிர்ப்புறத்திலிருந்த ஒரு கைதியின் அறையைத் திறந்துவிட அக்கைதி வெளியில் வந்து மற்றொரு கதவைத்திறக்க அவ்வறையிலிருந்து வெளிவந்த அந்தக் கைதியுடன் இருவருமாக எல்லாக் கதவுகளையும் திறக்கலாயினர்.

உற்சாகமான பேச்சுகளைப் பேசிக் கொண்டே தோழர்கள் 86 பேரும் கும்பல் கும்பலாகச்சற்று நேரம் கூடிநின்று பேசி அங்கிருந்த நெடிய ஆலமரத்தின் குச்சிகளை ஒடித்துப் பல் துலக்கியவராய்க், காலைக் கடன்களை முடித்துக் கொண்டவராய் ஒரு சேரக் குழுமி அடர்ந்த மரநிழலில் உட்கார்ந்தோம்.

''தண்ணீர் வாயிலேயே வைக்க முடி

ரோஜா முத்தையா

யவில்லையே'' இதுதான் அங்கு முதல் முதல் எல்லோரும் ஏகமனதாகப் பேசிய பேச்சு. ''ஆமா! எல்லா நாளுமே இப்படித்தான் தனித்தனியாய் இருக்கவேண்டுமா? என்கிற கேள்வி பிறகு ஒவ்வொருவரை நோக்கியும் கேட்கப்பட்டது. பக்கத்தில் நின்ற வார்டரை நோக்கி ஒருவர் இந்தக் கேள்வியைக் கேட்கவே, அவர் ''இன்னும் சற்று நேரத்தில் ஜெயில் சூப்பரின்டெண்ட் வருவார், அவரிடம் உங்கள் குறைபாடுகளை யெல்லாம் வரிசையாக நின்று கூறுங்கள்'' என்று ஆலோசனை கூறி இப்போது காலை யுணவு கஞ்சி என்றும், அதை உண்ணுங்கள் என்றும் கூறினார்.

கஞ்சி என்றவுடன், அது என்ன கஞ்சி? என்றும், எப்படியிருக்கும்? என்றும் எழுந்த கேள்விகளுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த கிரிமினல் கைதிகள் அதற்குப் பதில் கொடுத்தார்கள்.

இந்தச் சோளக் கஞ்சியில் உப்பு இருக்கமாட்டாது, அந்த உப்புக்குப் பதிலாக வெள்ளைப் புழுக்கள் அதில் காணப்படலாம், கண்ணை மூடிக் கொண்டு சூடாய் இருக்கும் போதே குடித்தால் குடித்துவிடலாம். ஆனால் உள்ளே போன பிறகும்கூட கொஞ்சம் கசப்பு இருக்கத்தான் செய்யும். இவைதான் அந்தக் கஞ்சியைப்பற்றி அநுபவ சிகாமணிகள் எங்களுக்குக்கூறிய அநுபவ மணிகள். இந்த அளவோடு கூட அவர்கள் நிற்கவில்லை, ''இதை நீங்கள் எப்படிக் குடிக்க முடியும்?'' என்று மேலும் அநுதாபத்தோடு வினவினார்கள். (தொடரும்)

★

தமிழனுக்குப் பிறந்த ஒரு சிசு தனக்கு இந்தி படிக்க முடியவில்லையே என்று அழுமானால் அதுவும் இந்தி எதிர்ப்புதான்.

ம. போ. சி.


# குருதைலம்

மிகச் சிறந்தது

தலைவலி ஜீரம்
ஜன்னி முதலிய சகலவித
வாய்வு வலிகளுக்கும் நிகரற்றது
உ10-வியாதிகளுக்கு
அரசன்







டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்
குரு மருந்து சாலை திருச்சிராப்பள்ளி


## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்

★

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| புது ரஷ்யா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE

ரோஜா முத்தையா